விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை (23.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 216

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# புலிகளின் பாதுகாப்பு இல்லை எனில் கண்காணிப்பாளர்கள் வெளியேறுவர்

## சுவீடன் சிறப்புத்தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு மாறவில்லை என்றால் கண்காணிப்புக்குழுவினர் வெளியேறுவர் என்று இலங்கைக்கு வந்த சுவீடன் நாட்டின் சிறப்புத்தூதுவர் அன்டரஸ் ஒஜெலென்டஸ் தெரிவித்துள்ளார். றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு நேற்று அவர் அளித்த நேர் காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழுவினருக்கு விடுதலைப்புலிகள் பாதுகாப்பு அளிக்கவில்லை என்றால், அதாவது பாதுகாப்பு மட்டுமல்ல சுவீடன் ,பின்லாந்து,டெனிஸ் உறுப்பினர்களின் பணிகளை ஏற்காத நிலைமை ஏற்பட்டால் நாங்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுமடம்-கோப்பாயில் இருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஓட்டுமடம் பகுதியில் நேற்றிரவு 6.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இனந்தெரியாதோரால் சுடப்பட்ட அவர் வைத்தியசாலையின் தீவிரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதே சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சுடப்பட்டு இறந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த நாகமணி (வயது 55) என்ற குடும்பஸ்தராவார்.

இதேவேளை நேற்றிரவு 6.35 மணியளவில் கோப்பாயில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இருபாலை சன்நெற் தொலைத்தொடர்பு நிலையத்தில் கடமையாற்றும் தவச்செல்வன் (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் வேலை முடிந்து வீடுதிரும்பும் போது சுடப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நேற்றிரவு சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## பல நோ.கூ.சங்க முகாமையாளர் கரந்தனில் வைத்து சுட்டுக்கொலை

இராசபாதை வீதி ,கரந்தன் சந்திக்கு அண்மையில் ஊரெழு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் வேலாயுதம் சின்னமணி தர்மராஜா (வயது 27) என்பவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.நேற்று முன்தினம் இரவு 6.30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மயிலிட்டியைச் சொந்த இடமாகவும் தற்போது கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது கரந்தன் சந்திக்கு அண்மையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்தைப் பார்வையிட்ட யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (து-133)

## புத்தூரில் வெள்ளி இரவு முதியவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் முதியவர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

புத்தூர் கிழக்கு ஊரணியைச் சேர்ந்த வல்லி கிட்ணர் (வயது 68) என்ற முதியவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவரும் இவரது மனைவியும் மாத்திரமே அந்த வீட்டில் வசித்து வந்ததாகவும் சம்பவ நேரத்தில் அவர் இரவு உணவை முடித்துக் கொண்டு வெளியே வந்தபோது சுடப்பட்டதாகவும் தெரியவருகிறது.சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட மல்லாகம் நீதிபதி சறோஜினி இளங்கோவன் விசாரணையை மேற்கொண்டதுடன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (து-133)

## கொழும்பு மாநகர சபை விரைவில் கலைக்கப்படுமாம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை கலைக்கப்படக் கூடும் என்று கொழும்புச்செய்திகள் தெரிவித்தன. கொழும்பு மாநகர சபை நிர்வாகத்தினை சிறப்பு ஆணையாளர் ஒருவரிடம் ஒப்படைப்பது தொடர்பாக மாகாண மற்றும் உள்ளூராட்சி விவகார அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் சட்டத்துறையினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறார்.

இதுவரை கொழும்பு மாநகரசபையின் நிர்வாகம் உரிய வகையில் அமையவில்லை என்று தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதனால் இது தொடர்பாக ஆராய்வதற்கு தான் தீர்மானத்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தலைநகராக இருக்கும் கொழும்பு நகரில் தொடர்ந்தும் சிக்கல் நிலை நீடித்தால் பாதுகாப்பு ,பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பெரும் பிரச்சினைகள் எழலாம். அதனால் அரசாங்கம் என்ற வகையில் அப்படியான நிலை கொழும்புக்கு ஏற்பட இடமளிக்க முடியாது என்றும் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (ச-5)

## வடக்கு-கிழக்கை பிரிக்கக் கோரும் மனுவை விசாரிக்க நீதிமன்றம் முடிவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கை பிரிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்வதற்கு ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவை நியமிக்க தலைமை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எல்.பி.வசந்த ,ஜெயந்த வீரசேகர மற்றும் திகாமடுல்லவைச்சேர்ந்த ஏ.எஸ். மொகமட் புகாரி ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்தனர்.

தலைமை நீதிபதி சரத் என்.சில்வா,ராஜா பெர்ணான்டோ,நிமல் காமினி அமரதுங்க ஆகிய மூன்று நிதிபதிகள் குழுவினர் இந்த மனுவை விசாரித்தினர்.

இம் மனுவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இம் மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர் ,வடக்கு கிழக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைக்காக குரல்கொடுக்க அனைவரும் அணிதிரள வேண்டும்-வை.கோ.

(சென்னை)

தமிழீழத் தனி அரசை தமிழீழ விடுதலைப்புலிகள் வென்றெடுப் பதற்கு உலகத்தமிழர்கள் அனை வரும் துணை புரிய வேண்டுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் வை.கோ. அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழீழ மக்களால் உலகத்தமி ழர்கள் வாழும் தலைநகரங்களில் முன்னெடுக்கப்படும் கறுப்பு யூலை எழுச்சிப்பேரணிகளை முன்னிட்டு ஐ.பி.சி.தமிழுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய சூழல் மாறி தமிழீழ தனியரசை தமிழீழ விடுதலைப்புலி கள் அரசேற்றும் காலம் வெகுவிரை வில் தோன்றுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் துயரங்களை அனைத்துலக சமூகம் கவனிக்கத் தவறியுள்ளபோதும் உலகத்தமிழர் கள் அனைவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் அணிதிரண்டு தமிழீழ தேசத்தின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டுமென்றும் வை.கோ. அழைப்பு விடுத்துள்ளார். (ச-5)

## வீதித்தடை போடப்பட்டிருப்பதால் நகரில் போக்குவரத்து நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரான்லி வீதியில் 'எக்ஸ்போ எயர்' நிறுவனத்திற்கு முன்பாக வீதித்தடை அமைக்கப் பட்டுள்ளது.

இவ் வீதித்தடையினால் ஸ்ரான்லி வீதியில் இருந்து வரும் வாகனங்களும் ஸ்ரான்லி வீதியை நோக்கிச்செல்லும் வாகனங்களும் பயணத்தை தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரான்லி வீதியூடாக யாழ் மினிபஸ். பஸ் தரிப்பு நிலையத்திற்குச் செல்லும் மாதகல். மூளாய். காரைநகர் மினிபஸ்கள் அவ் வீதி



தடை செய்யப்பட்டதன் காரணமாக கஸ்தூரியார் வீதியின் (10 ஆம் பக்கம் பார்க்க)

# இயேசுவின் பாதங்களே கவலை தீர்க்கும் மருந்து

ஒரு தொழிலை பயிற்சி உள்ளவர்கள் செய்வதற்கும் பயிற்சி இல்லாதவர்கள் செய்வதற்கும் பாரிய வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்கலாம். அதேபோல வண்டி ஓடப் பழக்கப்படாத மாட்டை வண்டியிலே பூட்டினால் அது ஆரம்பத்தில் ஓடுவதற்கு பின்வாங்கும். வேறு திசைகளில் இழுத்துக் கொண்டு ஓடும். உரிய பாதையில் செல்லமாட்டாது. கையைப்பறித்துக் கொண்டு ஓடிவிடவே காத்துக் கொண்டு தூரத் தூர விலகி ஓடிக் கொண்டிருக்கும். இது போலவே ஒரு காலத்தில் நாமும் இயேசுவை விட்டு தூர ஓடிப்போய் இருந்தோம். உலகத்தின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த எங்களையும் யூத இனத்தாரையும் இயேசு தம்மையே பலியாகச் சிலுவையில் ஒப்புக்கொடுத்ததன் மூலம் இரு இனத்தாரையும் ஒருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்கினார். இதன் மூலம் கடவுளை நாம் அப்பா, தந்தாய் என்று அழைக்கவும் அணுகிச் செல்லவும் பேறு பெற்றுள்ளோம்.

### எதிர்பார்ப்பின்றி அர்ப்பணிப்போம்

சமூகத்தை வழிநடாத்துகின்றவர்கள் பல விதமான எதிர்பார்ப்புகளை எதிர்நோக்கி பணியாற்ற முற்படுகின்றார்கள். ஒரு பணியைச் செய்பவருக்கு அப்பணி மூலமாக ஊதியம் கிடைக்கவேண்டுமென்பது நியாயமானது. ஆனால் இன்று சமூகப் பணியின் மூலம் தமது அந்தஸ்து பெருமையை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றவர்களே அதிகம் காணப்படுகின்றார்கள். தியாக மனப்பான்மையும் அர்ப்பணிப்புள்ள செயற்பாடுகளும் அருமையாகவே காணப்படுகின்றன. "தலைமைப்பண்பு பிறருக்குத் தம்மை அர்ப்பணிப்பதில் முத்திரை பதிக்கின்றது" என்று ஒரு அறிஞன் குறிப்பிடுகின்றான். இயேசுவும் சீடர்களும் களைத்துப் போய் இருந்த வேளையிலும் கூட ஓய்வெடுக்கத் தனிமையான இடங்களுக்குச் சென்றதை மக்கள் கண்டு, அவர்கள் சென்ற இடமெல்லாம் கூட்டமாய் ஓடி அவர்களிடம் சென்ற வண்ணமாகவே இருந்தார்கள்.

காரணம் இயேசும் சீடர்களும் நேரகாலம் பாராது தம்மிடம் வந்த மக்களின் குறைகளைத் தீர்த்து வைப்பதில் ஆர்வமாக இருந்ததினால் மக்கள் அவரைத் தேடித் தேடி ஓடினார்கள். "நீ தொழிலை நேசிக்கப் பழகு; அது உனக்குச் சுமையாய் இராது" என்று கன்பூசியஸ் கூறிவைத்துள்ளார். எமது பணிகளையே சுமையாகக் கருதுவதினால் தான் எம்மால் சமூகத்திற்கு நற்பணியாற்ற முடிவதில்லை. வரட்டுக் கௌரவங்களும், சுரண்டலும் சமூகத்தில் தலைகாட்டி நிற்கின்றன.

## பரமபிதாகாட்டிய பாதை

### இறைவனின் இல்லம் நாடுவோம்

பலவித கவலைகள் சூழ்ந்துள்ள எம்வாழ்வில் நாம் செய்வதறியாது பலவிதமான கவலையைப் போக்கும் வழிமுறைகளைப் பின்பற்றி அவற்றிலே சிக்கித் தவிக்கின்றோம். இதனாலே முறையற்ற, நேர்மையற்ற செயல்களிலே ஈடுபட்டு நிம்மதியை அடைந்துவிட எதிர்பார்க்கின்றோம். இறைவனைத் தவிர, அவரிடம் சரணடைவதைத் தவிர வேறெங்கும் கவலை போக்கும் மருந்தைப் பெற்றுக்கொள்ள முடியாது அரை மணிநேரமும் தனியாக ஆலயத்தில் அமர்ந்து பாருங்கள் ஆண்டவனின் அருட்பார்வை உங்கள் மீது படும்.

உள்ளத்தில் அமைதிபரவும். நிம்மதியான நினைவலைகள் உள்ளத்தில் உருவாகும். பாலைவன வாழ்வில் பசுமையான எண்ணங்கள் உருவாகும். அருகில் இருப்பவன் பகைவனாகத் தென்படமாட்டான்.



நன்மை செய்ய வேண்டுமென்ற உந்துதல் உருவாகும். அமைதியின் வடிவமாக இருக்கும் இறைவனை அமைதியோடு தேடினால் அவனருள் தனிப்பட்ட வகையில் எம்மைத் தொடும். ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

**அன்ரனி பீற்றர்**

அவரிடம் எமது குறைகளை எடுத்துச் சொல்லுவோம்! மன்னிப்பு வேண்டுவோம்! இதய அமைதியை நிச்சயமாக இறைவன் தரவல்லவராக இருக்கின்றார் அவரை நாடிச் செல்வோம் அமைதி பெறுவோம்.


## சிறுவிளம்பரம்

**UNIVAC**

யாழ் யுனிவெக் கணனி மென்பொருள் பொறியியல் பூங்காவில் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாக உள்ளது. புதிய பயிற்சி நெறிகள், சான்றிதழ்கள் தொடர்பான கருத்தரங்கு 28.07.2006 10மணிக்கு நடைபெறும்.

213, 2ம், மாடி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P 077-6176476 (475)


## வியாபாரம் குறைவு

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் வியாபாரம் குறைவாக இருப்பதால் பிரதேச சபை வரி வாடகை முதலியவைகள் கொடுக்க முடியாமல் இருப்பதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். இப்பிரதேசத்தில் இரு வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுவிட்டதாகவும், பலர் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிகிறது. து-72

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு பாதுகாப்பு அவசியம் இல்லை என்று கூறுவதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்.

பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் தடைகளை ஏற்படுத்துவதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. அதனை புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும் மாத்திரமே மேற்கொள்ள முடியும்.

முன்னாள் ஜனாதீபதியை குப்பையில் தள்ளுவதற்கு முடியாது. இந்த நிலையில் அவர் நாடு திரும்பியதும் அவருக்கு உரிய பாது காப்புகள் வழங்கப்படுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# அமைச்சர் வீட்டருகே கிளைமோர்குண்டு 6 தமிழர்கள் தொடர்ந்தும் காவலில்

(கொழும்பு)

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல வீட்டருகே கண்டெடுக்கப்பட்டவை விமானப் படையின் கிளைமோர் குண்டுகள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

கண்டியில் உள்ள ஹெகலிய ரம்புக்வெலவின் வீட்டருகே இரு கிளைமோர் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டதாக கூறப்பட்டதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த 6 தமிழர்களை இலங்கை காவல்துறையினர் கைது செய்தனர்.

இந்தக் கிளைமோர் குண்டுகள் தொடர்பாக விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டுகள் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமானவை என்றும் அதில் சிங்கள மொழியிலான குறிப்புக்களே இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த இருவரிடமும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தினர். ஆனால் அவர்களை விடுவித்துவிட்டனர். கைது செய்யப்பட்ட 6 தமிழர்கள் மட்டும் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (து)

# வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் இலவச மருத்துவசேவை முகாம்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் இலவச மருத்துவ சேவை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிமுதல் 12.30வரை பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற வுள்ள மருத்துவ சேவை முகாமில் மருத்துவ நிபுணர்களும், யாழ். பல்கலைக்கழக மருத்து பீட மாணவர்களும் மருத்துவ சோதனையை மேற்கொள் ளவுள்ளனர்.

கண்பார்வை குறைந்தவர்களுக்கு லயன் எஸ்.எம்.எம். பெர்னாண்டோவால் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படுமென்று வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி எம்.தங்கராஜா தெரிவித்துள்ளார்.

இறுதிநேரம் வரை காத்திருக்காமல் பதிவுகளை நேரகாலத்துடன் மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (அ-52,101)

## இராசிபலன்

**23.07.2006**

**(ஆடி 7, ஞாயிற்றுக்கிழமை)**

**திரயோதசி முற்பகல் 9.49 மணிவரை**

**திருவாதிரை பின்னிரவு 12.47 மணிவரை**

**இராகுகாலம் 4.32-6.02மணிவரை**

**சுபநேரம் 9.02-10.32 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, சகோதரர் உதவி, நல்ல செய்தி |
| இடபம் | தொழில் சிந்தை, போசனசுகக் குறைவு, பணவிரயம், பிரயாணநன்மை. |
| மிதுனம் | பெறுமானம், கௌரவநிலை, தேகசுகம், முயற்சி கைகூடும். |
| கடகம் | பிறருக்கு உதவுதல், சிந்தனை மிகுதி, போசன்சுகம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | தளகாரிய சேர்க்கை, சயனசுகம், குடும்ப மகிழ்ச்சி, தொழில் சிந்தை. |
| கன்னி | பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, உடல்நலம், நல்லசெய்தி. |
| துலாம் | சரீரப் பிரயாசை, பிரயாணம் கட்டுப்பாடு, முயற்சிதாமதம். |
| விருச் | மனக்கவலை, பொருள் விரயம், முயற்சி தாமதம், ரோகநிலை. |
| தனுசு | தெய்வ சிந்தை, கீர்த்தி, தேகநலன், விருந்துபசாரம். |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, போசனசுகம், உடல்நலம். |
| கும்பம் | உடல்நலக்குறைவு, பணக் குறைவு, தி சங்கற்பம், பெரியோர் உதவி. |
| மீனம் | தனவிரயம், தன்னம்பிக்கை, புதிய விரயம், ரோக நிலை. |

- வளவன்

## அன்பளிப்பு

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வடமராட்சியில் உள்ள இரு பாடசாலைகளுக்கு பந்துகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் விளையாட்டுப் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் வைத்து வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே பந்துகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (து-7)

# இதய அஞ்சலி




## தோழர்ராஜன், வோல்டர்

### (செபஸ்டியன் இருதயராஜன்)

**புளொட் யாழ்.மாவட்ட அமைப்பாளர் முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்**

கிளிநொச்சி உருத்திரபுரத்தை சொந்த இடமாகக் கொண்ட தோழர் ராஜன் தனது இளம் வயதில் இருந்தே புளொட் அமைப்பின் பல்வேறு முன்னணி அமைப்புக்களூடாகவும் பல்வேறு துன்ப, துயரங்களை சுமந்துகொண்டு தமிழ் பேசும் மக்களின் அரசியல் சமூக பொருளாதார விடுதலை பற்றிய நம்பிக்கைகளுடன் தொடர்ந்து உழைத்தவர். தமிழர் போராட்டம் தொடர்பான தெளிவும் அனுபவமும் மிக்க தோழர் ராஜனின் இழப்பு தமிழ் சமூகத்திற்கு பெரும் இழப்பாகும். ஜனநாயகம், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் வலியுறுத்தி வந்த அவரது இழப்பு ஜனநாயகம் மனித உரிமைகளை நேசிக்கும். அதற்காக குரல் கொடுக்கும் அனைவருக்கும் மிகப் பெரும் இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்த கட்சித் தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது பிரிவால் துயரடைந்திருக்கும் அனைவருடனும் எமது அனுதாபங்களை பகிர்ந்து கொள்கிறோம். தோழர் ராஜனுக்கு எமது இதய பூர்வமான அஞ்சலியை உரித்தாக்குகின்றோம்.

பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) (408)

# இரத்தினக் கல் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையைத் தெற்காசியாவிலேயே தலைசிறந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரண மத்திய தளமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களுக்கான கருத்தரங்கில் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

சீனன்கோட்டை பத்தகடையில் உள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பிராந்திய காரியாலயத்தில் இத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களின் நலன்கருதி பல சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கெவுடா கற்களை சுடேற்றி பதனிடல் பற்றிய விசேட பயிற்சி, இரத்தினக்கல் ஏற்றுமதி, இறக்குமதி பற்றிய தகவல்களை வழங்கல், ஆபரணங்களின் தர நியமங்கள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவூட்டல், இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கு வர்ண அட்டை சகிதம் அனுமதிப் பத்திரம் வழங்கல், ஆபரண உற்பத்தியாளர்கள் விற்பனை உற்பத்தி மற்றும் வர்த்தகர்களைப் பதிவுசெய்தல் போன்ற சேவைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

பேருவளை பர்பரீன் ஜெம் கம்பனியின் முன்னாள் பொது முகாமையாளருமான ஏ.ஏ.எம்.ஸஹீட்ஜே.பி, பேருவளை சீனன் கோட்டைக்கும் இரத்தினக்கல் வர்த்தகத்திற்கும் உள்ள நீண்டகால வரலாற்றையும் சீனன் கோட்டை இரத்தினக்கல் வர்த்தகர்கள் இந்த நாட்டின் இரத்தினக்கல் வர்த்தகத்துறை முன்னேற்றத்திற்கு வழங்கிய பங்களிப்பையும் தெளிவாக எடுத்து விளக்கினார்.

பேருவளை இரத்தினக்கல் வர்த்தக சங்கத் தலைவர் ஏ.ஐ.எம்.முஹம்மது ஸாகி ஹாஜியார் மாணிக்க கோட்டையாக திகழும் சீனன் கோட்டையில் தேசிய இரத்தினக்கல் அதிகார சபையின் பிராந்திய காரியாலயம் அமைத்தமைக்கு நன்றி கூறினார்.

இரத்தின கற்களை பரிசோதித்து தரச் சிறப்பை ஊர்ஜிதம் செய்யும் சேவையை சனிக்கிழமை நாட்களில் மட்டுமன்றி கிழமைக்கு ஐந்து நாட்களாவது மேற்கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

ஜப்பான், ஹங்கேரி, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளுக்கு எமது நாட்டு வர்த்தக சமூகத்தை பங்குபற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பந்துல விதானகே சிரேஷ்ட முகாமையாளர் அஜித்பெரேரே, உபதலைவர் பாலித கனேகொட ஆகியோரும் இங்கு உரையாற்றினர். (து-7)

# புனர்வாழ்வு நிலையங்களில் வாழும் சிறுவர்கள்

புனர்வாழ்வு நிலையங்களில் வாழ்ந்து வரும் சிறுவர்களை சமூகங்களுடன் இணைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சமூகங்களுடன் வாழ்ந்துவரும் சிறுவர்கள் அனுபவிக்கும் உரிமைகளை புனர்வாழ்வு நிலையங்களில் வாழும் சிறுவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமென்று சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்கள ஆணையாளர் சரத் அபயகுணவர்தன தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையங்களில் வாழ்ந்து வரும் சிறுவர்கள் மனோரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சிறுவர்களுக்கு சிறந்த மனோநிலையை உருவாக்கிக் கொடுக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள், ஆலோசனை நிலையங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் புனர்வாழ்வு நிலையங்களில் வாழ்ந்துவரும் சிறுவர்களின் திறமைகளை விருத்தி செய்ய முடியுமென்று சரத் அபயகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# ரோந்து சென்ற இராணுவம் மீது கிளைமோர்த் தாக்குதல்

வீதி ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் குண்டுத் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் மரணமானார்கள். மேலும் இரு சிப்பாய்கள் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு பெருமளவில் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. (து-15)

# கைக்குண்டு வீச்சில் சிப்பாய் காயம்

நேற்று முன்தினம் வடமராட்சி சக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் மீது இனம் தெரியாதவர்களால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு உந்துருளியில் வந்த தாக்குதலாளிகள் கைக்குண்டை காவலரண் நோக்கி வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கைக்குண்டு வீச்சில் ஒரு படைச்சிப்பாய் படுகாயடைந்த நிலையில் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (து)

# கடற்றொழிலாளி கடத்தப்பட்டார் சுப்பர் மடத்தில் சம்பவம்

(மருதங்கேணி)

நேற்றுக் காலை 6.30 மணியளவில் சுப்பர் மடத்தில் ஜஸ்ரின் குரூஸ் (வயது 25) என்ற இளைஞர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து சுப்பர்மடத்தில் வசித்துவந்த இவர் சம்பவம் நிகழ்ந்த தினத்தன்று தனது வீட்டில் தேனீர் அருந்திக்கொண்டிருந்த சமயம் இரண்டுபேர் இவரைக் கூப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்களுடன் பேசிக்கொண்டு சென்ற இவரை ஒழுங்கை திருப்பத்தில் வைத்து வேறு இரண்டு பேர் மடக்கிப் பிடித்து வானில் ஏற்றிக்கொண்டு சென்றிருக்கிறார்கள். இவரைக் கூப்பிட்டுக் கதைத்தவர்களும் அதே வானில் ஏறிச் சென்றுள்ளார்கள்.

கடல் தொழில் செய்து வரும் இவர் திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். அன்றைய தினம் தேக உபாதை காரணமாகத் தொழிலுக்குச் செல்லாமல் வீட்டிலிருந்த நேரத்திலேயே இவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார். (து-15, 35, 104)

# வலி. கிழக்கு பிரதேச சபையின் வேலைத் திட்டங்கள்

ஒருங்கிணைந்த மாகாண அபிவிருத்தித் திட்ட நிதியைப் பயன்படுத்தி வலி.கிழக்கு பிரதேச சபையினர் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

அச்சுவேலி தீத்தான் குள மயான வீதி, ஸ்ரீவிக்னேஸ்வரா வீதி, உரும்பிராய் பொக்கனை வீதி, சேமப்புலம்வீதி, புத்தூர் அறிவொளி வீதிஎன்பன கல்லிட்டு தாரிடப்பட வுள்ளன.

பன்னாலை சிவசக்தி கிராமத்திற்கான மின் விநியோகம், அச்சுவேலி வைத்திய சாலைப் புனரமைப்பு, அச்சுவேலி உப அலுவலக தண்ணீர்தாங்கி புனரமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்களிற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு யாழ்.செயலகத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.செயலகத்தின் அனுமதி கிடைத்ததும் விரைவில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பொ.நடராசா அறிவித்துள்ளார். (து-36)

# கட்டு யானை தாக்கியதில் அம்பாறையில் ஒருவர் பலி

(அம்பாறை)

அம்பாறை நகரில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் கொல்லப்பட்டும் மற்றொருவர் காயமடைந்துமுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச்சம்பவத்தையடுத்து வன பரிபாலன அதிகாரிகள் குறித்த காட்டு யானையை விரட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த காலத்தில் இவ்வாறான காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக 16பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# வித்தாகிப் போனவர்களின் இலட்சியம் ஈடேற செயலாற்றுவோம் - தயாமோகன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தேசியத் தலைவர் 34 வருட காலமாக மேற்கொண்டு வரும் சிறப்பான வழிநடத்தலில் வித்தாகிப் போன மாவீரர்களின் தியாக அர்ப்பணிப்பினால் தமிழ் மக்கள் விடுதலையின் வாசலில் நின்றுகொண்டிருக்கின்றனர் என மட்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.தயாமோகன் தெரிவித்துள்ளார்.

களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் விநாயகர் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலைநிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடைசெய்த மறுகணமே தமிழ் மக்கள் பொங்கி எழுந்துவிட்டார்கள். அதாவது மக்கள்படை, கிராமியப் படை, எல்லைப்படை, துணைப்படை எனப் பல கட்டுமான படைகளுடன் மக்கள் போராட்டத்தின் உச்சக்கட்டத்தினை அடைந்து வருகின்றனர்.

மூன்றாம் கட்ட ஈழப்போரினை பாரிய சவால்கள் மத்தியில் எதிர்கொண்டு தற்போது நான்காம் கட்ட ஈழப்போருக்கு தயாராகிய நிலையில் உள்ளார்கள். இதில் மக்களின் ஒற்றுமையும் மன எழுச்சியும் வலுவானதாக அமைந்துள்ளது.

இதுவரை காலமும் மண்மீட்பு சமரில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த 17ஆயிரத்து 950 மாவீரர்கள் எந்த இலட்சியத்திற்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய் தார்களோ அவர்களின் கனவை நாம் நனவாக ஒன்று சேரவேண்டும் எனக் கூறினார். (து)

# அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிப்போருக்கு..

(கொழும்பு)

அமெரிக்காவிற்கு செல்வதற்கு விசாவிற்கு விண்ணப்பிக்கும் இலங்கை மற்றும் மாலைதீவின் விண்ணப்பதாரிகள் ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி முதல் ரி.ரி. சேவைகள் லங்கா லிமிட்டெட் என்னும் நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்குமாறு கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இலக்கம் 32 சீ சேர் மொகமட் மக்கான் மாக்கார் வீதி, கொழும்பு-03 என்னும் இலக்கத்திலுள்ள இந்நிறுவனத்திற்கு விசா விண்ணப்பிப்பதற்கான அனைத்துவித தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுமாறு தூதரகம் மேலும் தெரிவிக்கின்றது. (து)

# விடுதலைப் புலி சந்தேக நபருக்கு உதவியதாக கிராமசேவகர் கைது

விடுதலைப் புலி சந்தேக நபருக்கு உதவியதாக தெகிவளை கிராம சேவகர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் கடற்பரப்பில் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி இலங்கை கடற்படையால் அருளப்புகுமார் என்பவர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் விடுதலைப் புலி உறுப்பினர்என்றும் அவரிடம்தெகிவளையை முகவரியாகக்கொண்ட தேசிய அடையாள அட்டை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் தெகிவளையில் நடத்திய விசாரணைகளின் போது அந்த அடையாள அட்டை போலியானது என்றும் குறிப்பிட்ட முகவரியில் உள்ள வீடு ஆழிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட்டது என்றும் இலங்கை காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதையடுத்து சந்தேக நபரான அருளப்புகுமாருக்கு தெகிவளை முகவரியுடன் கூடிய அடையாள அட்டை வழங்க உதவி செய்தமைக்காக தெகிவளை கிராம சேவகர் கைது செய்யப்பட்டதாக கல்கிசை பொலிஸார் கூறியுள்ளனர். (து)

# இலங்கைக்கு இந்திய அரசாங்க முறையே சிறந்தது

இலங்கைக்கு இந்திய அரசாங்க முறைதான் சிறந்தது என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே பேசுகையில்,

இலங்கை இனப்பிரச்சினைக்கு சுவிஸ், நோர்வே, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டாட்சி முறை பொருத்தமற்றது சுவிஸ் போன்ற நாடுகளில் எந்த ஒரு சக்தியும் ப்யங்கரவாதம் மூலம் தனியரசு கோரவில்லை. ஆனால் இங்கே அத்தகைய சக்திகள் உள்ளன. ஆகையால் அந்த நாட்டினது மாதிரி நமக்கு ஏற்புடையது அல்ல.

இந்தியாவில் தனியரசு கோரும் குழுக்கள் இருந்தபோதும் 1947ஆம் ஆண்டு முதல் அது பிரிவினைக்குட்படாத நாடாக உள்ளது. ஆகையால் இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்திய அரசாங்க முறையே சரியானதாக இருக்கும்.

அதிகாரப்பகிர்வு என்று கூறப்படும் நிலையில் ஒற்றையாட்சியா, ஐக்கிய அமைப்பா என்ற வார்த்தைகள் முக்கியம் அல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய முறையை ஏற்பது குறித்து அரசியல் கட்சிகள் விவாதிக்க முன்வரவேண்டும். இருந்தபோதும் இது எனது தனிப்பட்ட கருத்துதான் அரசாங்கத்தின் கருத்து அல்ல என்றார். (து)

இன்று ஒரு தகவல்

# செய்தி வாசனை

ஒரு மனிதன் கோபமாக இருக்கிறானா...மகிழ்ச்சியாக இருக்கிறானா என்பதை அவன் முகத்தைப் பார்த்தே கண்டுபிடித்துவிடலாம். அதாவது, முகபாவங்கள் மூல மாக மனிதன் தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்துகிறான்.ஆனால் விலங்குகள் அப்படி அல்ல! பாலூட்டிகள் எல்லாம் தம்முடைய சிற்றினத்தில் உள்ள உறுப்பினர்களின் மனநிலையையும் சமூக அந்தஸ்தையும் வாசனை மூலமாகக் கண்டுபிடிக்குமாம்!

ஒரு தாய்க்கும் குட்டிக்கும் இடையிலே ஏற்படுகின்ற பிணைப்பிலே தான் வாசனையைத் தேர்ந்தெடுக்கிற பழக்கம் உண்டாகுதாம்.

ஒரு குட்டி பிறந்தவுடனே தன்னுடைய உடம்பிலே பரவியிருக்கிற பிரசவ காலத்திரவங்களின் வாசனையும் தாயின் உடல் வாசனையும் ஒன்றாக இருப்பதனாலே தான் தாயை நாடி சரியாக ஓடுகிறது. அதற்கப்புறம் பால் குடிக்கும் போது தாய் குட்டியை நக்கி தன் எச்சிலைக் குட்டியின் உடம்பிலே பூசிவிடுகிற போதும் இந்த வாசனை ஒற்றுமை நீடிக்கிறது.

மனிதனைத் தவிர மற்றைய பாலூட்டி விலங்குகள் எல்லாம் பெர்மோன்கள் எனப்படும் ஆவியாகிற வேதிச் சேர்மங்களின் உதவியால் தான் செய்திகளைப் பரப்புகின்றன என்பது அறிவியல் உண்மை. இந்த வேதிச் சேர்மங்களை அடையாளம் கண்டுகொள்ள அந்த விலங்குகளிடம் பல புலன்கள் உண்டு. உணர்வு தூண்டும் மூலக்கூறுகள் காற்றில் பரவி விலங்குகளின் மூக்கில் நுழைந்து வாசனை உணர்வை உண்டாக்குகின்றன.

அங்கேயிருந்து மோப்பக் குழிகளிலுள்ள விசேஷமான ஏற்பிகளுக்குச் செய்தி போகுது. அங்கே அது பொருள் காணப்பட்டு விலங்கின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மோப்பக் குழிகளை நீக்கிவிட்டால் தாய்ப் பாசமும் பிள்ளைப் பாசமும் மறைந்து போய் விடுமாம்.

குட்டிகளைத் தாய் புறக்கணித்து விடுமாம்! சில சமயங்களில் மோப்ப உணர்வை இழந்த தாய் , தன்னுடைய குட்டிகளையே சாப்பிட்டு விடுகிறதாம்.

1962இல் லண்டனிலே எம்.ப்ரூஸ் (M.Bruce) என்பவர் தலைமையிலே ஒரு குழு ஆராய்ச்சி பண்ணியதாம். அவர்கள் ஒரு வேடிக்கையான விளைவைக் கண்டு பிடித்தார்களாம். அதற்கு 'ப்ரூஸ் விளைவு' என்றே பெயர் வைத்து விட்டார்களாம்.

அது என்ன விபரம் என்றால், கருவுற்ற ஒரு பெண் சுண்டெலி...வேறு ஒரு ரகத்தைச் சேர்ந்த ஆண் சுண்டெலியின் வாசனையை முகரநேர்ந்தால் அது தான் 'ப்ரூஸ் விளைவு'

நாய்கள் தரையைத் தேய்த்துப் பின்னங் கால்களால் மண்ணை உதைத்து வீசும். அப்பொழுது அதன் உள்ளங்காலில் இருக்கிற சுரப்பிகளில் இருந்து ஒரு சுரப்பு தரையில் பரவும். அது என்ன தெரியுமா? நாய் தன்னுடைய அறுபோகப் பரப்பைக் குறித்து வைக்கிற உத்தி அது.

நாய் , பூனை இதெல்லாம் ஓடிவந்து உங்கள் காலிலே உடம்பைத் தேய்த்தால்..."ஆகா! எவ்வளவு எஜமான் விசுவாசம் இவர்களுக்கு? அப்படி எண்ணி ஏமாந்து போயிடாதீங்க...

உண்மையில் தங்களை உங்களுடைய வளர்ப்புப் பிராணி என்று மற்ற நாய் பூனைகளுக்கு அடையாளம் காட்டி வைப்பதற்காகத் தான் உங்கள் மேலே வாசனையைப் பூசி வைக்கிறது.

யானைகள் மரக்கிளைகளை ஓடிச்சு வைக்கும். தந்தங்களாலேயே மரப்பட்டையைக் கீறிவைக்கும்.

புலி, நகத்தால் மரப்பட்டைகளைக் கீறிவைக்கும். இவை எல்லாம் அடையாளச் சின்னங்கள்... அதைப் பார்த்து மற்றவை புரிந்து கொள்ளும்.

ஆக,மிருகங்களுக்கு மொழிப்பிரச்சினை இல்லை. வாசனைமூலமாகவே செய்திகளைப் பரிமாறிக்கொள்கின்றன. வாசனை மூலமாகவே செய்திகளைத் தெரிவிக்கிற மனிதர்களும் உண்டு.

தன் வீட்டிலே உட்கார்ந்தபடியே எதிர்வீட்டிலே என்ன சமையல் என்பதை ரொம்பச் சரியாகக் கண்டு பிடிக்கிற புத்திசாலிகளும் உண்டு. ஒருவர் சொன்னார் எதிர்வீட்டுக்காரரிடம்..."இன்னிக்கு உங்க வீட்டிலே கத்தரிக்காய் சாம்பார் ! சரியா? என்றார். "எப்படிக் கண்டு பிடிச்சீங்க?" என்றார் அவர் ஆச்சரியத்துடன். "அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லே... எங்க தோட்டத்திலே காய்த்திருந்த கத்தரிக்காயைக் காணவில்லை...அது தான் அப்படி..." என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# விரக்தியால் விலகும் இராணுவத் தளபதிகள் ஜனாதிபதியின் முயற்சி பலன் தருமா?

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மீது நம்பிக்கையின்மை பாதுகாப்பு குறித்த அச்சம் ஆகியவற்றால் விரக்தியடைந்து பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அவர்களை மீள பணியில் சேருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தி வருகிறார். அண்மையில் ஓய்வுபெற்றவர்கள் மற்றும் விரைவில் ஓய்வு பெறுவதற்காக காத்திருக்கும் பட்டியலில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத் தளபதிகள் இடம்பெற்றுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ தனது முதல் நடவடிக்கையாக ஓய்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்சவை சந்திக்குமாறு தனது செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு அறிவுறுத்தினார். தனது ஓய்வுக்காலத்ததுக்கு முன்னமே கடந்த மாதம் இராணுவத்திலிருந்து மேஜர் ஜெனரல் பி.சந்திரவன்ச விலகிவிட்டார்.

இராணுவத்தில் மீண்டும் இணையுமாறு மஹிந்த கேட்டுக்கொண்டதாக பி.சந்திரவன்சவிடம் லலித் வீரதுங்க கூறியுள்ளார். ஆனால் தன்னால் பணியில் மீண்டும் சேரமுடியாது என்று சந்திரவன்ச மறுத்துவிட்டார். எதனைப் பற்றியும் கவலைப்படவேண்டாம் எதிர்காலத்தில் அனைத்தையும் மஹிந்த ராஜபக்ஷ கவனத்தில் எடுத்தக்கொள்வார் என்று லலித் வீரதுங்க வலியுறுத்திய போதும் அதனை சந்திரவன்ச நிராகரித்துவிட்டார் இந்தச் சந்திப்பு ஒரு மணிநேரம் நடைபெற்றது.

கடந்த நவம்பரில் இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவியேற்ற போது கொழம்பு கட்டளைத் தளபதியாக சந்திரவன்ச பணியாற்றினார். அதன் பின்னர் சந்திரவன்சவை யாழ்ப்பாணத்துக்கு பொன்சேகா மாற்றினார் அதை விரும்பாததால் சில மாதங்களுக்கு முன்பே தனது ஓய்வு பெறும் கடிதத்தை சரத் பொன் சேகாவிடம் சந்திரவன்ச கையளித்திருந்தார் சரத் பொன்சேகாவும் அதனை ஏற்றுக்கொண்டார்.

சந்திரவன்சவைப் போல இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் இயக்குநரான பிரிகேடியர் ரிஸ்வி சக்கியையும் மீள பணிக்கு அழைக்கும் முயற்சியில் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவு இயக்கு நராக இருந்த ரிஸ்லி சக்கியை சரத் பொன்சேகா யாழ்ப் பாணத்துக்கு இராணுவ அதிகாரியாக நியமித்தார். அப் பொறுப்பில் நியமிக்கப்பட்ட சில வாரங்களிலேயே தனது விலகல் கடிதத்தை ரிஸ்வி சக்கி கொடுத்துவிட்டு ஜனவரியில் பணியிலிருந்து விலகிக்கொண்டார்.



யாழ்ப்பாணத்துக்கு ரிஸ்வி சக்கியை மாற்றியதையடுத்தே இலங்கை இராணுவ புலனாய்வுத் துறை பாரிய சிதைவுக் குள்ளானதாக கூறப் படுகிறது.

அதன் தொடர்ச்சியாகவே மூன்றாம் நிலை தளபதி பாரமி குலதுங்க கொல்லப்பட்டதாகவும் இராணுவத்தினர் கருதுகின் றனர்.

ரிஸ்வி சக்கி யின் விலகலைத் தொடர்ந்து காலி கட்டளைத் தள பதி யான பிரிகேடியர் ரொகான் ஜயசிங்கவும் விரக்திய டைந்து பணியிலிருந்து விலகிவிட்டார்.

மேலும் வெலி ஓயா கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிமல் ஜயசூர்ய, மன்னார் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதேனி முன்சிங்க ஆகியோரும் பணியிலிருந்து விலகும் முடிவில் உள்ளதாகத் தெரிகிறது.

வரணி 52 ஆம் டிவிசன் கட்டளை அதிகாரியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் ஜயசூர்ய அவர் வகித்து வந்த பதவிக்கு கீழான நிலையில் வெலிஓயாப் பகுதி தளபதியாக மாற்றப்பட்டதால் அவர் விரக்தியடைந்துள்ளார்.

இராணுவ செயலாளராக இருந்த உதேனி முனசிங்கவும் மன்னார் தளபதியாக நியமிக்கப்பட்டார். பெருந் தொகையான இராணுவத்தினர் வாகனேரியில் ஊடுருவியும் தெளிவான திட்டமிடல் இல்லாமையால் 12 இராணுவத்தினரை இழக்க நேரிட்டது என்று கொழும்பு ஊடகம் ஒன்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை இராணுவம் பலவீனமாகி வரும் நிலையில் இராணுவத்தின் முக்கிய தளபதிகள் பலரும் இப்படி தொடர்ச்சியாக விலகி வருவது குறித்து அதிர்ச்சியடைந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்களை மீண்டும் பணியில் இணைக்க தீவிரம் காட்டி வருவதாக அலரிமாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# மஹிந்தவுக்கு பாடம் புகட்டுவேன் சந்திரிகா குமாரதுங்க ஆவேசம்

(கொழும்பு)

அரசாங்கத்தை எதிர்வரும் ஒக்டோபரில் கவிழ்க்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்ட



மிட்டுள்ளதாகவும் இன் நட வடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கும் நிலையில் அரசாங்கத்தை கவிழ்க்கபேச்சுக்களை நடத்தி வருவதாகவும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரி விக்கின்றன.

தற்போது லண்டனில் உள்ள சந்திரிகா எதிர்வரும் சில நாட்களில் இலங்கை திரும்பவுள்ளார் . சுதந்திரக்கட்சியில் உள்ள தனது ஆத ரவாளர்களைக் கொண்டு மஹிந்தவை கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்க சந்திரிகா திட்டமிட்டுள்ளதாக அக்கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த இரு விடயங்கள் தொடர்பாக லண்டனில் இருந்து நாளாந்தம் தனது ஆதரவாளர்களுடன் சந்திரிகா தொடர்பு கொண்டு நிலைமைகளை கேட்டறிந்து வருவதாகவும் தான் நாட்டில் இல்லாத போது கட்சித் தலைவர் பதவியைப் பறித்த மஹிந்தவுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று சந்திரிகா கூறிவருவதாகவும் சுதந்திரக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க ஆகியோரை முன்னிலைப்படுத்தி இந்தத் திட்டங்களை சந்திரிகா மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதித்தேர்தலின் போது மஹிந்தவை தீவிரமாக முன்னிலைப்படுத்திய மங்கள சமரவீர தற்போது மஹிந்தவின் செயற்பாடுகளில் கடும் அதிருப்தியடைந்துள்ளதால் அவரையே முதன்மைப்படுத்த வாய்ப்புக்கள் இருப்பதாகவும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.(து)

# துறைமுக வேலை நிறுத்தம் முடிவு!

கொழும்புத்துறைமுகத்தில் மேற் கொள்ளப்பட்டு வந்த வேலை நிறுத் தம் நேற்று முன்தினம் நண் பகல் அளவில் முடிவுக்குக் கொண் டுவரப்பட்டுள்ளது. கடந்து 9நாட்களாக சம்பள அதிகரிப்பை வேண்டி இலங்கைத் துறைமுக அதிகார சபை ஊழியர்கள் இந்த வேலை நிறுத் தத்தை மேற் கொண்டுவந்திருந்தனர்.

துறைமுக அதிகார சபையுடன் இடம்பெற்ற பேச்சவார்த்தையையடுத்து வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஊழியர் சங்கங்கள் இணக்கம் தெரிவித்தன.

நடைபெற்ற பேச்சு வார்த்தையில் துறைமுகங்கள் மற்றும் விமா னத் துறை அமைச்சர் மங்கள சமர வீர, பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் துறைமுக அதிகார சபை யின் பிரதி தலைவர் ஆகியோருடன் அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளும் பங்கேற் றிருந்தனர். (து)



கரந்தன் சந்தியில் நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுடப்பட்ட ஊரெழு ப.நோ. கூ.சங்க முகாமையாளர் வேலாயும் சின்னமணி தர்மராஜ வின் சடலத் தையும் அவரது தந்தையார் அழுது புலம்புவதையும் படங் களில் காணலாம்.(படங்கள்:திலீவின்பன்)

# அணிக்கு எப்போது சுமையாகின்றேனோ அப்போது நான் ஓய்வு பெறுவேன்!

## மேற்கிந்திய தீவுகள் அணித்தலைவர் லாரா



(துபாய்)

அணிக்கு எப்பொழுது நான் சுமையாக மாறுகிறேனோ அந்நேரத்தில் ஓய்வுபெறுவேன். உலக கோப்பை போட்டிகளின் போதுஎனதுவாழ்க்கைவரலாற்றை வெளியிடவுள்ளேன் என லாரா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள்மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. ஒருநாள் தொடரை இழந்தாலும் இந்திய அணி டெஸ்ட் தொடரில் வெற்றிபெற்றது. டெஸ்ட் தொடர் முடிந்தவுடன் சரியான வீரர்களை அணியில் இடம்பெறச் செய்யாத தேர்வாளர்களால் தான் தோல்வியடைய நேரிட்டது என லாரா தெரிவித்தார். இதையடுத்து லாராவை விசாரணை செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. தற்போது துபாய் வந்துள்ள லாரா இந்திய அணியின் சுற்றுப்பயணம் மற்றும் பல சுவையான விஷயங்கள் பற்றி அளித்த பேட்டியில்

** தேர்வாளர்கள் மீது எதற்காக குற்றம் சாட்டினீர்கள்?*

நான் அவர்கள் பற்றி தவறாக எதுவும் கூறவில்லை. உண்மையில் நடந்தவைகளைப் பற்றி மட்டுமே தெரிவித்தேன். தொடரை இழந்த வருத்தத்தில் எனது மனதில் இருந்ததை வெளிப்படையாக பேசினேன்.

** மூன்றாவது முறையாக அணித்தலைவராக நியமிக்கப்பட்டதை எப்படி உணர்கிறீர்கள்?*

அணியின் முன்னாள் வீரர்கள் சக நண்பர்கள் வற்புறுத்தியதால்தான் அணித்தலைவர் பொறுப்பை ஏற்றேன். இதில் எனது தனிப்பட்ட விருப்பம் எதுவும் இல்லை.

** இந்தியாவுக்கு எதிரான தொடரில் உங்கள் வீரர்கள் எதிர்பார்த்த அளவுக்கு விளையாடினார்களா?*

நிச்சயமாகத ஒருநாள் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னர் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெறும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இளம் வீரர்களின் சிறந்த ஆட்டத்தால் வெற்றி பெற்றோம். மேலும் டெஸ்ட் தொடரிலும் கடைசி ஆட்டத்தில்தான் இந்திய அணி வெற்றிபெற்றது.

** ராகுல் டிராவிட் அணித்தலைமை பற்றி?*

இந்திய அணியை அவர் முன் நின்று வழிநடத்திச் செல்கிறார். இக்கட்டான தருணங்களில் ஓட்டங்கள் குவித்து அணிக்கு உறுதுணையாக உள்ளார். அவரது தலைமைத்துவம் மிகவும் நன்றாக உள்ளது.

** உலக கோப்பை போட்டிகளுக்கு பின் உங்களது திட்டம்?*

தற்போது எதையும் முடிவு செய்யவில்லை. கிரீன்ட்ஜ், ரிச்சர்ட்ஸ் மற்றும் அலெக் ஸ்ருவர்ட் 40 வயது வரை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். அணிக்கு எப்போது நான் சுமையாக மாறுகிறேனோ அந்தக்கணமே ஓய்வுபெற்று விடுவேன்.

** மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்டின் எதிர்காலம் எப்படி உள்ளது?*

இந்தியா, அவுஸ்திரேலியா நாடுகளை ஒப்பிடும்போது மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட்டிற்கான வசதிகள், நிதி ஆதாரங்கள் மிக்வும் குறைவே. திறமையான இளம் வீரர்கள் இருந்தும் போதிய வசதிகள் இல்லாததால் அவர்களால் முன்னேற முடிவதில்லை.

** கிரிக்கெட் வீரர்கள் பலர் புத்தகம் எழுதியுள்ளனரே நீங்கள் எப்போது?*

தற்போது அவ்வேலையில் தான் மிகவும் ஈடுபாடாக உள்ளேன் எனது கிரிக்கெட் வாழ்க்கை தவிர பல சுவையான சம்பவங்களடங்கிய தொகுப்பாக இருக்கும். உலக கோப்பையை ஒட்டி புத்தகம் வெளியிடப்படும். இவ்வாறு லாரா தெரிவித்தார்.

# மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி மேற்கிந்திய தீவுகளில் அடுத்த ஆண்டு நடத்த திட்டம்

உலகக் கோப்பை போட்டிக்கு முன்னதாக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்கும் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியை நடத்த மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைதிட்டமிட்டுள்ளது.

உலகக் கோப்பை போட்டிக்கு இந்த 3 நாடுகள் போட்டி சிறந்த பயிற்சியாக அமையும் என இந்திய அணி மேலாளர் டோனி ஹோவர்டு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3 நாடுகள் மட்டும் பங்கேற்கும் போட்டிக்கான கருத்துருவை மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கு அனுப்பியுள்ளோம். அதற்கு சபை ஒத்துழைப்பு தருமா இல்லையா என்பது தெரியாது. ஆனால் உலகக் கோப்பை போட்டிக்கு முன்பு பங்கேற்கும் 3 நாடுகளுக்குமே அது சிறந்த பயிற்சியாக அமையும். ஆதலால் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறோம் என ஹோவர்டு உள்ளூர் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள உலகக் கோப்பை போட்டிக்கு ஒரு மாதத்துக்கு முன்பாக 3 நாடுகள் போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது.



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் இலங்கை அணியினர் கொழும்பு எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் பயிற்சியிலீடுபடும் போது மஹேல ஜெயவர்த்தனாவை முதுகில் தூக்கி எடை போடுகிறார் லசித் மலிங்கா. இவ்விரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

# மற்ரஸிக்கு தண்டனை வழங்கியமைக்கு இத்தாலிப் பத்திரிகைகள் கண்டனம்

இத்தாலி வீரர் மற்ரஸி மீது சர்வதேச உதைபந்தாட்டக் கூட்டமைப்பான பிபா வழங்கிய தண்டனைக்கு அந்நாட்டு பத்திரிகைகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

உதைபந்தாட்டக் களத்தில் முறைத்துக்கொண்ட-மோதிக்கொண்ட வீரர்கள் ஜிடேன், மற்ரஸி இருவரையும் ஒழுங்கு நடவடிக்கை குழு அழைத்தது சர்வதேச உதைபந்தாட்டக் கூட்டமைப்பான பிபா. ஜிடேன் செய்த குற்றம் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் மற்ரஸி தான் குற்றம் செய்யவில்லை தகாத வார்த்தைகள் கூறவில்லை என்று மறுத்து வந்தார். ஆனால் பிபா மற்ரஸியின் தவறை உறுதி செய்தது. மற்ரஸிக்கு 2 போட்டிகள் தடை மற்றும் 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அபராதமாகவும் ஜிடேனுக்கு 3 போட்டிகளில் தடை அபராதமும் வழங்கி பிபா தீர்ப்பளித்தது. இதனால் 6 ஆயிரம் அமெரிக்க டொலர் களை மற்ரஸி செப்.2இல் லிதோனியேவுக்கு எதிராக நடக்கவுள்ள யூரோ கோப்பைக்கான (2008) தகுதிப் போட்டியிலும் செப்.6இல் பிரான்சுக்கு எதிரான போட்டியிலும் பங்கேற்க முடியாது. ஜிடேன் உலக கோப்பை தொடரோடு ஓய்வை அறிவித்து விட்டதால் அவர் அபராதம் மட்டுமே கட்டவேண்டும்.

மற்ரஸிக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக்கு இத்தாலி பத்திரிகைகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இத்தாலி யின் பிரபல விளையாட்டிற்கான பத்திரிகை கெஜட்டா டெல்லோ ஸ்போர்ட் பிபா வழங்கிய தீர்ப்பை இழிவான வார்த்தை என்று சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் விளையாட்டு வீரர்கள் அரசியல்வாதிகள் மற்றும் பிரபலங்கள் இத்தீர்ப்பால் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என்றும் ஜிடேனுக்கு பிபா ஒரு தலைப்பட்சமாக செயல்பட்டு குறைவான தண்டனை வழங்கியுள்ளது என்றும் செய்திவெளியிட்டுள்ளது.



மற்றொரு முன்னணி பத்திரிகையான கொரைரா டெல்லோ ஸ்போர்ட் வெளியிட்ட செய்தியில் வன்முறையை ஊக்குவிக்கும் வகையில் பிபாவின் தீர்ப்பு உள்ளது என்று கருத்து தெரிவித்துள்ளது.

ரிபப்ளிகா பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் ஜிடேனை வெறுப்பேற்றியதை உறுதிசெய்த பிபா விசாரணைக்குழு மற்ரஸியை தண்டிக்க உதைபந்தாட்ட உலகில் எந்தச் சட்டமும் இல்லை என்று கூறியுள்ளது.

# இந்தியா- மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் தொடர் ரத்து

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் ரத்து செய்தது.

இந்தியா, மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் கனடாவில் எதிர்வரும்செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கிறது. இந்நிலையில் இத்தொடரை ரத்து செய்வதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதுகுறித்து கிரிக்கெட் சபை செயலர் நிரஞ்சன்ஷா் கூறுகையில்,

கனடா கிரிக்கெட் சபை தெரிவித்த தகவலின் படியே இந்தியா மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் கனடாவில் பங்கேற்கவிருந்த ஒருநாள் கிரிக்கெட் தொடர் ரத்து செய்யப்பட்டுள்ளது. இத்தொடரை அடுத்த ஆண்டு நடத்துமாறு கனடா கிரிக்கெட் சபை சர்வதேச சபையிடம் தெரிவித்துள்ளது. ஆனாலும் இத்தொடரை மலேசியா, சிங்கப்பூர் மற்றும் நெதர்லாந்து நாடுகளில் நடத்த இந்திய கிரிக்கெட் சபை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது என்றார்.

தொடரை ரத்து செய்தது குறித்து கனடா கிரிக்கெட் சபை நிர்வாகி கூறுகையில், தொடரை தற்போதைக்கு நடத்த முடியாத சூழ்நிலையில் கிரிக்கெட் சபை உள்ளது. மேலும் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையில் நடந்து வரும் பிரச்சினையும் தொடரை ரத்து செய்ததற்கு முக்கிய காரணம் என்றார்.

**விளையாட்டு செய்திகள்**

**அமிர்தன்**

## இலங்கையுடனான டெஸ்ட் தொடரில்

# முத்தையா முரளிதரனே எமக்கு சவாலானவர் தென்னாபிரிக்க அணித்தலைவர் பிறின்ஸ்



ஆஷ்வெல் பிரின்ஸ்

(கொழும்பு)

இலங்கையுடன் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரில் மூத்தையா முரளிதரனின் சுழற்பந்து வீச்சே எமக்கு சவாலாக அமையும் என தென்னாபிரிக்க் அணியின் தலைவர் அஷ்வெல் பிறின்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த பிறின்ஸ் எமது அணியில் இளம் வீரர்களின் கூட்டணி சிறப்பாக போட்டிகளை எதிர்கொள்ளும் எனவும் கூறினார்.

உலகில் முத்தையா முரளிதரன் முதல்தர டெஸ்ட் சுழற்பந்து வீச்சாளர். அதிலும் அவருடைய சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்வது மிகவும் சவாலானது எனவும் தெரிவித்தார்.

எமக்கு ஸ்மித் இல்லாதமை ஒரு சவாலாக இருப்பினும் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பில் இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கை அணியை குறைத்து கணக்கிட முடியாது. அவர்களில் அனுபவமிக்க சனத்ஜெயசூர்யா, அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா, சங்கக்கார , தரங்க என துடுப்பாட்ட கூட்டணியுடன்; பந்துவீச்சில் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ், அனுபவமிக்க உலகின் முதல்தர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் என சிறப்பான வீரர்களைக் கொண்ட அணி.



முரளிதரன்

எனவே சமபலமுடைய இரு அணிகள் சந்திக்கவுள்ள இந்தத் தொடரில் எமது முழுப்பலத்தை வெளிப்படுத்தி வெற்றி பெறுவோம் என்றார் தென்னாபிரிக்க அணித்தலைவர் அஷ்வெல் பிறின்ஸ்.

# உணவுப் பழக்கத்தால் உன்னத வாழ்வு வாழலாம்!

**தினை, சாமி, வரகு, குரக்கன் முதலியவற்றை உணவாக உண்ட எம் முன்னோர் குன்றாத உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். அவர் வழிவந்த இன்றைய சந்ததியினருக்கு தினை, சாமி என்பதைப்பற்றி எதுவும் தெரியாது. அனேகர் அவற்றை கண்ணால் பார்த்தது கூடக் கிடையாது.**

இமய மலையையொட்டி பாகிஸ்தான் எல்லைக்குள் வரும் பகுதி அது. ''உணவும் உடல் நலமும்'' என்ற ஆராய்ச்சிக்காக அங்கு போன ராபர்ட் மெக்காரி என்னும் பிரிட்டிஷ் டாக்டர் அந்த இடத்தைப் 'பூலோக சொர்க்கம்' என வர்ணித்துள்ளார்.

உண்மையில் அது சொர்க்கம் தான்! அங்கே வசித்த 'ஷுன்சா' என்னும் பழங்குடி மக்கள், சாதாரணமாக 120 வயதுவரை வாழ்ந்தார்கள். 90வயதிலும் குழந்தை பெற்றுக்கொண்டார்கள். புற்றுநோய், இதயநோய், பிளட் பிரஷர் என எதுவுமே அவர்களுக்கு வந்ததில்லை. பனிபடர்ந்த மலைப் பகுதியில் வசித்தாலும் ஜலதோஷம், காய்ச்சல் வந்து ஒருவரும்படுத்ததில்லை. யாரும்உடல்பெருத்த மூச்சு வாங்குவதில்லை. நூறு வயதிலும் அவர்களுக்கு ஊசியில் நூல் கோர்க்கும் அளவுக்கு கண்பார்வை தெளிவாக இருந்தது. எண்பது வயதுப் பாட்டியைப் பார்த்தால் ஐம்பது வயது ஐரோப்பிய நங்கை மாதிரி இருப்பார். தோல் சுருக்கம் இல்லாததால் வயதானதே தெரியவில்லை. நாகரீக மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டு நகரங்களில் வாழ்பவர்கள் எல்லா நோய்களாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்க, இந்தப் பழங்குடியினர் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

இதுஎப்படிச் சாத்தியமாயிற்று? அவர்களது உணவுப்பழக்கம்தான். இந்த அற்புத வாழ்க்கையைச் சாத்தியப்படுத்தியது. ஷுன்சா பழங்குடியினரின் பிரதான தொழில் விவசாயம். இயற்கைமுறை விவசாயத்தில் நம்பிக்கை கொண்ட அவர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களின் எல்லாக் கழிவுகளையும் உரங்களாகப் பயன்படுத்தினார்கள். கோழிகள் விதைகளைத் தின்றுவிடுமென்பதால் கோழிகளை வளர்க்க அங்கு தடை. இறைச்சிக்காக ஆடுகளை மட்டும் வளர்த்தார்கள். ஆனால் விசேஷ நாட்களில் மட்டும் தான் இறைச்சி.

உணவுக்காக அவர்கள் தினை வளர்த்தார்கள். தினை மாவும் தினைச் சோறும் தான் முக்கிய உணவு. இதன்பிறகே தினையின் அருமை தெரிந்து அதை ஐரோப்பிய நாடுகளில் வளர்க்க ஆரம்பித்தனர். இப்போது தினை மாவில் செய்யப்படும் பாண் ஒரு முக்கிய உணவாக அங்கே சக்கைபோடு போடுகிறது. ஆனால் நம் ஊரில் ஐம்பது ஆண்டுகளுக்குமுன்புவரை தினை விளைந்த நிலங்கள் இப்போது வேறு பயிர்களை விளைவிக்கின்றன. நாமும் தினை சாப்பிடுவதை மறந்துவிட்டோம். இன்றைய இளம் தலைமுறையில் அனேகமானவர்களுக்கு தினை என்றால் என்ன என்றே தெரியாது.

கோதுமை, பார்லி போன்றவற்றையும் அவர்கள் சாப்பிட்டார்கள். இதுதவிர, உணவில் ஏராளமான பழங்கள் சேர்த்துக் கொண்டார்கள். ஆப்பிள், செர்ரி, வாதுமை கொட்டை, பேரிக்காய் என்பனவெல்லாம் அங்கே விளைந்தது. கீரைகள், கரட், பட்டாணி, முள்ளங்கி எனக் காய்கறிகளை விளைவித்துச் சாப்பிட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக கடைகளில் விற்கும் செயற்கை இராசயனங்கள் எதையும் அவர்கள் உணவில் சேர்த்ததில்லை. வேளா வேளை உணவுக்கு இடையே நொறுக்குத் தீனி சாப்பிடும் பழக்கமும் கிடையாது.

களால் ஈர்க்கப்படுகிறோம். சுவை நன்றாக இருக்கிறதா என்பதை மட்டும் பார்த்துவிட்டு அது உடம்புக்கு நல்லதா என்பதைப் பார்க்க மறந்துவிடுகிறோம்.

இந்த அடிப்படைத் தவறுதான் எல்லா நோய்களுக்கும் காரணமாகிவிடுகிறது. ''அமுதம் விஷமாக மாறுவதும், விஷம் அமுதமாக மாறுவதும் அதைச் சாப்பிடும் முறையிலேதான் இருக்கிறது'' என்று சரக சம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ''உணவு தான் எல்லா உயிரினங்களினதும் ஜீவன். ஆனால் அதைத் தவறான வழியில் உட்கொண்டால் அது விஷமாக உயிரைக் கொல்லும். அதேநேரம் விஷத்தையே முறையான வழியில் உட்கொண்டால் அது அமுதமாகி விடும்'' என்று சொல்கிறார் சரகர்.

தவறான விதத்தில் உணவு உண்பதால் ஒருவரது உடலில் ஏற்படும் மோசமான விளைவுகளை ஐந்து விதங்களாகப் பிரிக்கிறது ஆயுர்வேதம்.

ஒன்று... உணவின் அளவைக் குறைத்துச் சாப்பிடுவதால் ஏற்படும் பாதிப்பு. வறுமை காரணமாக, போதிய அளவு உணவு கிடைக்காமல், பல வேளை பட்டினி கிடந்து, கிடைக்கும் கொஞ்சம் உணவை உண்டு வாழ்க்கையை ஓட்டுவதால் ஏற்படும் பாதிப்பு

# மருந்தாக விளங்கும் உணவு விஷமாக மாறும் அபாயம்?

காமல், பல வேளை பட்டினி கிடந்து, கிடைக்கும் கொஞ்சம் உணவை உண்டு வாழ்க்கையை ஓட்டுவதால் ஏற்படும் பாதிப்பு. இப்படிப் பாதிக்கப்படுபவர்களுக்கு நல்ல உணவுதான் மருந்து.

இதேபோலவே இருக்கும் இன்னொரு வகை... உணவில் சத்துக் குறைந்திருப்பதால் ஏற்படும் பாதிப்பு. இவர்கள் ஏழைகள் அல்லர். ஆனால் எது சத்துள்ள உணவு என்று தெரியாமல் வெறும் சக்கைகளைச் சாப்பிடுபவர்கள். நிறையச் சாப்பிட்டாலும் உடலுக்குப் போதுமான ஊட்டம் கிடையாது. இதனகால் சோயையாக இருப்பார்கள். அடிக்கடி உடம்புக்கு முடியாமல் அவதிப்படுவார்கள்.

உணவின் அளவு, சத்து இரண்டிலும் அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டுவிடுவது மூன்றாவது ரகம். சாப்பிட வேண்டுமென்ற உணர்வு ஏற்படும் போது இவர்களால் உணவு விஷயத்தில் கட்டுப்பாடுகாட்ட முடியாது. இஷ்டத்துக்கு வெட்டிவிட்டு உடல் பருத்து, தேவையற்ற கொழுப்புச் சேர்ந்து, உயர் ரத்த அழுத்தம், இதயக்கோளாறு என எல்லாவற்றையும் வரவேற்று உடலில் தங்க வைத்துக்கொள்வார்கள்.

உடலுக்கு பொருத்தமில்லாத உணவுகளைச் சாப்பிட்டு உபாதைகளை வரவழைத்துக்கொள்வது அடுத்த ரகம். ஒவ்வொருவரது உடலும் தனித்தன்மை வாய்ந்தது. உடலின் பிரகிருதி, குடலின் செரிமான சக்தி ஆகிய

வயிறும், இரத்த ஓட்டமும் பாதிக்கப்பட்டு அவதிக்கு ஆளாவார்கள்.

ஆயுர்வேதத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு உணவுக்கும் தனித்தன்மை வாய்ந்த குணம் உண்டு. அதைச் சாப்பிட்டால் உடலுக்கும் சூடு அல்லது குளிர்ச்சி உடனடியாகக் கிடைக்கிறது. அதோடு அந்த உணவு செரித்த பிறகு உடலில் ஒரு விளைவை ஏற்படுத்துகிறது. இரண்டு மூன்று உணவுகளைக் கலந்து சாப்பிடும்போது அந்தக் கலவை நல்லதாக இருந்தால் நல்ல விளைவு ஏற்படும். கெட்டகலவையாக இருந்தால் மோசமான விளைவுகள் ஏற்படும். தானியங் கள், பருப்புகள், பழங்கள், மாமிசம் என ஒவ்வொன்றிலும் எதை எதனோடு சேர்த்தால் சரி... எந்தவிதமான கலவை தப்பு எனப் பெரிய பட்டியலே இருக்கிறது.

உதாரணமாக பால் சாப்பிடும்போது அதோடு வாழைப்பழத்தைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. பாலும் குளிர்ச்சி; வாழைப்பழமும் குளிர்ச்சி. இரண்டும் இணைந்து குடலுக்குப் போகும் போது செரிமான சக்தியைக் குறைத்து மந்தமாக்கிவிடும். ஜலதோஷம், இருமல், அலர்ஜி எனப் பாதிப்புகள் வரும்.

இதுபோல பாலுடன் உப்புச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. புளிப்பான பழங்கள், உணவுகளை பாலோடு சேர்த்துச் சாப்பிடுவது தவறு. புளிப்பான உணவில் இருக்கும் அமிலங்கள் பாலுடன் வேதிவினை புரிந்து, அதை உறைய வைக்கும் முயற்சியில் ஈடுபடு

இதுபோல பாலுடன் உப்புச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. புளிப்பான பழங்கள், உணவுகளை பாலோடு சேர்த்துச் சாப்பிடுவது தவறு. புளிப்பான உணவில் இருக்கும் அமிலங்கள் பாலுடன் வேதிவினை புரிந்து, அதை உறைய வைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன. இதனால் இரண்டுமே சீக்கிரம் செரிக்காமல் வயிற்றில் அப்படியே தங்கிவிடுகின்றன. வயிற்றுக் கோளாறு ஏற்படுகிறது. பால் பொருட்களோடு மாமிசம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

இதேபோல, பழங்களை உருளைக்கிழங்கு போன்ற மாச்சத்துள்ள பொருட்களோடு சேர்ந்து சாப்பிடக்கூடாது. பழங்கள் சீக்கிரம் செரிக்கக்கூடியன. மாப்பொருட்களின் செரிமானம் தாமதமாகும். இரண்டும் சேர்ந்த கலவை வயிற்றுக்குள் போகும்போது குடல் குழப்பத்தில் தவித்துவிடும். மாச்சத்துள்ள பொருட்களை முட்டை, தேநீர், வாழைப்பழம், பேரீச்சம்பழம் ஆகியவற்றோடு சேர்த்துச் சாப்பிடக்கூடியது.

சிலர் சாப்பிடும்போது ஜில் என்று ஐஸ் வாட்டர் குடிக்கிறார்கள். இன்னும் சிலர் தண்ணீருக்குப் பதிலாக குளிர் பானங்களைக் குடிப்பர். இரண்டுமே தவறு. குளிர்ச்சியான இவை, செரிமான வேகத்தைக் குறைத்து

குடலுக்கு உதவி செய்யும்.

நாம் சாப்பிடும் உணவு மோசமான கலவையாக இருந்துவிடாமல் பார்த்துக்கொள்வதோடு ஒவ்வொரு வேளை உணவிலும் இரண்டு அல்லது மூன்றுவிதமான உணவுகளுக்கு மேல் இல்லாதபடி பார்த்துக்கொள்வதும் அவசியம். அப்படி இருந்தால் குடல் ஓவர்டைம் வேலைபார்க்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு விதமான உணவையும் செரிக்க வைக்கத் தனித்தனியான திரவங்களை அது சுரக்க வைக்கும். வித்தியாசமான பல அயிட்டங்கள் என்றால் பலமடங்கு வேலை குடலுக்கு. புரோட்டீன்களைச் செரிக்கவைக்க அமிலம் தேவை. மாச்சத்துள்ள உணவுகளை செரிக்கச் செய்ய காரத்தன்மையுள்ள திரவம் தேவை. இப்படி ஒவ்வொன்றையும் தனித்தனியாக இனம்பிரித்து ஜீரணிப்பது குடலுக்குப் பெரிய வேலைதானே!

இரண்டு மூன்று நல்ல உணவுகளைக் கலக்கும்போது அது உடலுக்கு விஷமாகிவிடுவது ஒருபுறம் என்றால் தனியாகச் சாப்பிடும்போது உடலுக்கு ஒத்துவராத பல உணவுப் பொருட்கள் கூட்டணி சேர்ந்து அமுதமாவதும் நடக்கிறது.

தர்ப்பூசணி, கிர்ணிப்பழம் என நீர்ச்சத்துள்ள பழங்களைச் சாப்பிடும்போது சிலர் அதில் மிளகுத் தூளை தூவிச் சாப்பிடுவார்கள். அந்தப் பழக்களை வெறுமனே சாப்பிட்டால் கபம் அதிகமாகி அதனால் ஜலதோஷம், இருமல் எனப் பாதிப்புகள் வர வாய்ப்பு உண்டு. ஆனால் மிளகுத்தூள் இந்தப் பழங்களில் இருக்கும் அதிகப்படியான நீர்ச்சத்தை உறிஞ்சி இந்தப் பாதிப்பைத் தவிர்த்துவிடும். வெள்ளரிக்காயில் மிளகுத் தூள் போட்டுச் சாப்பிடுவது கூட இதற்காகத்தான்.

தேநீரில் நாம் ஏலக்காய் பொடித்துப் போட்டுச் சாப்பிடுவது போல அரேபியர்கள் காப்பியில் ஏலக்காய் போட்டுச் சாப்பிடுவார்கள். ஏலக்காய் போடுவது வாசனைக்காக மட்டும் அல்ல. இது தேநீர் மற்றும் காப்பியின் அமிலத் தன்மையைக் குறைத்து.

கள். ஏலக்காய் போடுவது வாசனைக்காக மட்டும் அல்ல. இது தேநீர் மற்றும் காப்பியின் அமிலத் தன்மையைக் குறைத்து. வயிற்றில் அமிலத் தொந்தரவு ஏற்படாமல் தடுக்கிறது. மதுபானங்களை நிறையக்குடிக்கும் ஐரோப்பியர்கள் அதை ஈடுகட்ட கரட் ஜூஸ் குடிப்பார்கள். மதுசாரத்தின் பக்க விளைவுகளை இது சமன் செய்கிறது.

## நன்றி-அவள் விகடன்

நாம் சாதாரணமாகச் சாப்பிடும் உணவில் கூட இப்படிக் கச்சிதமான ஆரோக்கியம் தரும் கலவை இருக்கிறது. ஏதாவது ஒரு தானியம்.. கூடவே ஒரு பருப்பு என இருக்கிறது இந்தியர்களின் சமையல் மெனு. இட்லி, தோசை மாவில் அரிசியோடு உளுந்து சேர்க்கிறோம். சப்பாத்தியோடு பருப்புக்கூட்டுச் சேர்த்துச் சாப்பிடுகிறோம். பொங்கல் என்றால் அதில் அரிசியும் பாசிப்பருப்பும் கூட்டணி அமைத்திருக்கிறது. சாப்பாட்டில் அரிசிச் சாதத்தோடு பருப்புசாம்பார் சேர்க்கிறோம். சாம்பார் இல்லாவிட்டாலும் காய்கறிக் கூட்டில் பருப்பு இருக்கிறது. இப்படி எல்லாவற்றிலும் தானியம் மற்றும் பருப்புக்கூட்டணியே ஆதிக்கம் செலுத்துகிறது. இக் கலவைபற்றி ஆராய்ந்த வெளிநாட்டு அறிஞர்கள் ஆச்சரியமடைந்திருக்கிறார்கள்.

# கவனிக்கப்படாத பாடசாலை

(வடமராட்சி)

புலோலி மேற்கு சைவப் பிரகாச வித்தியாலயம் கடந்த 20 ஆண்டுகளாக எந்தவித அபிவிருத்திகளையும் காணாததாக இருக்கிறது எனப் பெற்றோர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இப் பாடசாலை சதாவதானி கதிரவேற்பிள்ளை போன்ற தமிழறிஞர்களும் சைவப் பெரியார்களும் கல்வி கற்ற பாடசாலையாகும். வடமராட்சிகடற்கரையோரத்தை அண்டிய இப்பாடசாலை சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுனாமியினால் பாதிக் கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து இப்பாடசாலையில் தங்கியிருக்கின்றனர்.

கடந்த 10 வருடங்களில் இப்பாடசாலையில் புதிய கட்டடங்களோ தவேறு வசதிகளோ எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து கல்வித் திணைக்களமோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ இப்பாடசாலையின் அபிவிருத்தி குறித்து இதுவரை எவ்வித கவனமும் செலுத்தவில்லை என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (து-7)

# "யுத்தத்தால் தீர்வு காணமுடியாது" ரணிலுக்கு கலாம் ஆலோசனை

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்க்க தூரநோக்கு தேவையென்று இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் இந்திய ஜனாதிபதியை சந்தித்து உரையாடினார்.

இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி அப்துல்கலாம், ''குரோத மனப்பான்மையுடன் பிரச்சினைகளை அணுகமுடியாது. அர்ப்பணிப்பும் பொறுமையும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியம். யுத்தத்தினால் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டமுடியாது.

இதனை அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன'' எனச் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பின் போது ஒஸ்லோ இணக்கத்தின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு தீர்வை அடையமுடியுமென்ற கருத்தை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையின் இறைமைக்கு உட்பட்ட விதத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்ட தாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயார் என்று உறுதியளித்துள்ளார். (து-9)

# 18 வயதுக்குட்பட்டோரை ஆபத்தான தொழிலில் அமர்த்த தடைச்சட்டம்

(கொழும்பு)

18வயதுக்குக்கீழான நபர்கள் எவரையும் ஆபத்தான தொழில்களில் அமர்த்துவதை தடை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு ஏதுவாக பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கு அமர்த்தல் திருத்தச்சட்டம் மூலம் ஒன்றை தொழில் உறவுகள், வெளிநாட்டுவேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுடசெனவிரத்தன கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்தச் சட்டத்தின் படி 18வயதுக்குக்குறைந்த நபர் ஒருவரின் உடல் நலம் பாதுகாப்பு அல்லது ஒழுக்கம் ஆகியவற்றுக்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய தொழில்களில் அமர்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இச்சட்டத்தைமீறி 18வயதுக்குட்பட்ட நபர்கள் யாராவது ஒருவர் தொழிலுக்கு அமர்த்தப்பட்டால் அது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

இக் குற்றத்தைப் புரிந்த ஒருவர் நீதவான் முன்னிலையில் குற்றவாளியாக நிறுத்தப்படுவாராயின் அவருக்கு 10ஆயிரம் ரூபா அபராதமும் அல்லது ஒருவருட சிறைத் தண்டனையோ அல்லது இரண்டு தண்டனைகளுக்குமோ ஆளாக நேரிடுவதுடன். பாதிக்கப்பட்ட நபருக்கு நீதவான் தீர்மானிக்கும் நட்டஈட்டுத்தொகையையும் அவர் செலுத்தவேண்டும்.

2006ஆம் ஆண்டுக்கான இத்திருத்த சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெண்கள் , இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தல் தொடர்பான 1956ஆம் ஆண்டில் 47ஆம் இலக்க சட்டமே திருத்தப் பட்டு 20அ(1) என்ற பிரிவு புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள சட்டத்தின் படி சிறுவர்களை (14 வயதுக்குக் குறைந்தவர்கள்) தொழிலுக்கு அமர்த்தல் தடை செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது புதிய சட்ட திருத்தமானது இளம் ஆட்களை (18வயதுக்குட்பட்ட) எவரையும் ஆபத்தான தொழிலுக்கு அமர்த்தல் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வறுமையின் காரணமாக சிறுவர்கள் தொழிலுக்குச் செல்கின்றனர். அவர்களுக்கு கல்வியூட்டுவதன் மூலம் இந்நிலையில் இருந்து அவர்களை விடுவித்துக்கொள்ள முடியும். இதில் அரச சார்பற்ற நிறுவனங்களையும் விழிப்பூட்டுவதுடன் பெற்றோர்களும் அறிவுறுத் தப்பட வேண்டும். சிறுவர்களின் உழைப்பை அநீதியான முறையில் பெற்றுக் கொள்வதற்கு எதிராக சர்வதேச சட்டவாக்கத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

இந்தத்திருத்தச்சட்டம் இதனை மேலும் வலுவாக்குகிறது. வெளிநாடுகளிலும் இவ்வாறான ஏற்பாடுகள் உள்ளன. உலக மயமாக்கலின் கீழ் இந்த குற்றங்களைப் புரிவோர் புதிய உத்திகளை கையாண்டு தப்பித்துக்கொள்கின்றனர். அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள் ளப்படவேண்டும் எனவும் அமைச்சர் அதாவுட செனவிரத்தின சபையில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

அருணலு

அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு

ஆண்டு 5 மாணவர்களின்

பெற்றோர்களுக்கு ஒரு நற்செய்தி!

2006 ஆண்டு ஆகஸ்ட் மாத புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடையும் அருணலு கணக்கு வைப்பாளர்களுக்கு பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

நீங்களும் தாமதிக்காமல், உங்கள் பிள்ளைகளுக்கு அருணலு கணக்கொன்றை அருகில் உள்ள கொமர்ஷல் வங்கிக்கிளைக்கு சென்று ஆரம்பியுங்கள். பரீட்சையின் போது கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியிருக்கும் சகல மாணவர்களும் இந்த பெறுமதியான பணப்பரிசில்களை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களுக்கும் அருணலு சார்பாக எமது நல்வாழ்த்துக்கள்.

கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

(C/407)

## நீர்கொழும்பு சென்றவரை காணவில்லை என முறைப்பாடு

நீர்கொழும்புக்குச்சென்ற 3 பிள்ளைகளின் தந்தை ஒருவரைக் காணவில்லை என யாழ். மனித ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்தயூன்மாதம் 23ஆம் திகதி வேலைக்காக நீர்கொழும் புக்குச் சென்றிருந்த புது வீதிகாரை நகரைச் சேர்ந்த முடியப்பு முடிராசா வயது 39 என்பவரையே காணவில்லை என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் அவரதுமனைவி முடி ராசா புஸ்ப மலர் என்பவர் முறைப் பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-133)

## சைக்கிள் ஈயக்குண்டு கடத்திய இருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட பெருமளவிலான சைக்கிள் ஈயக்குண்டுகளை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து இவை கைப்பற்றப் பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 5ஆயிரம் சைக்கிள் ஈயக் குண்டுகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-9)

## சிவராம் படுகொலையில் குற்றப்பத்திரிகை தாக்கல்

மாமனிதர் சிவராம் படுகொலை தொடர்பாக புளொட் இயக்கத் தலைவர் சித் தார்த்தனின் ஓட்டுநர் ஆறுமுகம் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிறிஸ்கந்தராஜா 2005ஆம் ஆண்டு 13ஆவது குற்றவியல் சட்டத்தின் சிறப்புப் பிரிவின் கீழ் சட்ட மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றத்தில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் முதல் ஏப்ரல் 28ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கொழும்பு பம்பலப்பிட்டி மற்றும் மஹரகமை ஆகியப் பிரதேசங்களில் சிவராமைக் கடத்துவதற்குத் திட்டமிட்டமை, அதன்படி கடத்தியமை, படுகொலை செய்தமை, அவரின் செல்லிடப்பேசியை திருடியமை ஆகிய 4 குற்றச்சாட்டுக்களுக்காக சட்டாம அதிபரினால் ஆறுமுகம் சிறீஸ்கந்ராஜாவுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (து)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 33

முருக-தனுஷ்கோடி



பிராமணர் சூத்திரர் என்ற வார்த்தைகளும் அதில் இருந்து கிளம்பிய சில விவகாரங்களும் அப்போது அபிப்பிராய பேதத்தை உண்டுபண்ணின. ராஜாஜி மந்திரி சபைக்கு எதிர்ப்புக் கிளம்பியது இதில் இருந்துதான். புது ஆரம்ப கல்வித் திட்டம் ஒன்றை ராஜாஜி வெளியிட்டார் தொடர்ந்து அதைப்பற் றிப் பேசலானார். ராஜாஜியின் இந்த வியாக்கியானங்கள். பெரும் பரபரப்பை ஏற்படுத்தின .ராஜாஜிக்கு எதிர்ப்பு அதிகமாயிற்று. புது ஆரம்பக் கல்வித் திட்டத்தை அவர் வெளியிடு முன்பு அவர் கல்வி மந்திரியைக்கூடக் கலந்து ஆலோசனை செய்யவில்லை அவரே அத் திட்டத்தை வெளி யிட்டார் . சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியிடம் கூட இக்கல்வித் திட்டம் குறித்து அவர் கலக்கவில்லை.

குலத் தொழிலைப் பயிற்றுவிப்பதற்காக புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக ராஜாஜி கூறினார் . உடனே நாட்டின் நாலாபுறத்தில் இருந்தும் எதிர்ப்பு பலமாகக் கிளம்பியது. ராஜாஜியின் குலக் கல்வித் திட்டம் என்று கூறி எல்லோரும் அதைக் கடுமையாக விமர்சனம் செய்தனர்.

கல்வி மந்திரியையும் சட்டசபையைக் காங்கிரஸ் கட்சியையும் கலக்காமல் தன்னிச்சையாக நீங்கள் ஒரு கல்வித் திட்டத்தை வெளியிட்டது. சரியா? என்று ராஜாஜியிடம் சரமாரியாகக் கேட்கப்பட்டது.

சங்கரரும் ராமானுஜரும் தங்கள் கொள்கைகளை வெளியிடுவதற்கு முன்பு மற்றவர்களிடம் கலந்து கொண்டா வெளியிட்டார்கள் என்று பதில் சொன்னார் ராஜாஜி . அவருக்கு இருந்த எதிர்ப்பை இந்தப் பதில் உச்ச கட்டத்திற்குக் கொண்டுபோய் விட்டது.

தமிழ்நாடு இவ்வித பரபரப்பில் இருந்தபோது மதுரையில் ஒரு விழா நடந்தது. அந்த விழாவில் காமராஜும் ராஜாஜியும் கலந்துகொண்டனர்.

1953ஆம் ஆண்டு மதுரையில் நடந்த டி.வி.எஸ். கட்டடத் திறப்பு விழாவே அது. சி.பி.ராமசாமி ஐயரும் இந்த விழாவில் கலந்துகொண்டார்.

விழாவில் ராஜாஜி பேசும்போது பிராமணன் சூத்திரன் என்று பேச்சை ஆரம்பித்தார் . சூத்திரன் செய்யவேண்டிய மோட்டார்த் தொழிலைப் பிராமணன் செய்வதாகத் தமது பேச்சில் ராஜாஜி குறிப்பிட்டார். ராஜாஜி இவ்வாறு குறிப்பிட்டதும் காமராஜ் கோபம் கொண்டார். தொடர்ந்து பேசிய ராஜாஜி டி.வி. சுந்தரம் ஐயங்காரைப் பாராட்டியும் பேசினார். வயதானதும் டி.வி. சுந்தரம் ஐயங்கார் தமது புத்திரர்களிடம் தொழிலை ஒப்படைத்திருக்கிறார் என்றும் டி.வி.சுந்த்ரம் ஐயங்காரரின் இந்தச் செய்கை பாராட்டுக்குரியது என்றும் ராஜாஜி கூறினார்.

அடுத்து காமராஜ் பேசினார். காமராஜ் பேசிய பேச்சைக் கேட்டதும் விழாவில் கூடியிருந்தவர்கள் அனைவரும் அதை வரவேற்று கரகோசம் செய்தனர்.

வாலிபர்களிடம் வயோதிபர்கள் பொறுப்பை ஒப்படைப்பதைப் பற்றி ராஜாஜி இங்கு கூறினார். ராஜாஜி இவ்வாறு பேசியதை நான் ஆதரிக்கிறேன். வர்த்தகத்தில் மட்டுமல்ல ராஜ்ய நிர்வாகத்திலும் கூட அந்த வழியை வயோதிபர்கள் (ராஜாஜி போன்றவர்கள்) பின்பற்றினால் நாட்டிற்கு நிச்சயமாக நன்மை ஏற்படும் என்று காமராஜ் பேசினார்.

ராஜாஜியின் தலைமைமீது தன்னுடைய கருத்து என்ன என்பதைக் காமராஜ் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே சொன்னது பலரையும் கவர்ந்தது.

ராஜாஜியின் புதிய ஆரம்பக் கல்வித்திட்டம் விவகாரமாகவேயாகிவிட்டது .இத்திட்டம் குறித்துச் சட்ட சபையில் காரசாரமாக விவாதம் நடந்தது அப்போதெல்லாம் இந்த விவாதத்தை ஓட்டெடுப்புக்கு விடாமல் ஒத்திவைக்க காமராஜ் சம்மதித்தார். காமராஜின் ராஜதந்திரமே இது என்று அப்போது சிலருக்கு மட்டுமே தெரிந்தது. காமராஜ் பொறுமையோடு நடந்து வந்து குலக் கல்வித் திட்டத்தின் மீது இருந்த ஆத்திரத்தை- ஆவேசமாக மாற்றியது. அப்போது தான் காமராஜின் ராஜதந்திரம் புது கல்வித் திட்ட விவாதத்தை ஓட்டெடுப்புக்கு விடாமல் ஒத்திவைக்கச் சம்மதித்தது பலருக்கும் புரிந்தது.

## ராஜாஜி ராஜினாமா!

ஆந்திர மாகாணம் தனியாகப் பிரிந்ததும் ஒரு கிளர்ச்சி நடந்தது ஆந்திரா தனியாகப் பிரிந்து விட்டதால் சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தல் புதிதாக நடத்தப்படவேண்டும் என்பதே அந்தக் கிளர்ச்சி.

தாம் தொடர்ந்து சட்டசபைக் காங்கிரஸ் தலைவராக இருக்கவேண்டுமா இல்லயைா என்பதைத் தெரிந்து கொள்ள கட்சிக் கூட்டத்தைக் கூட்டப் போவதாக ராஜாஜி 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் திகதி ஓர் அறிக்கை வெளியிட்டார்.

மறுநாள் 7ஆம் திகதி ராஜாஜி இன்னோர் அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையில் ராஜாஜி பின் கண்டவாறு கூறினார். நான் தலைவராய் இருப்பதைக் காமராஜ் விரும்பவில்லை என்று நினைத்து முதல் நாள் அறிக்கை வெளியிட்டுவிட்டேன் பிறகு காமராஜிடம் பேசினேன் நான் தலைவராய் இருப்பதில் ஆட்சேபனை இல்லை என்று அப்போது காமராஜ் கூறினார். ஆகவே முதல் நாள் அறிக்கைப் படி கூட்டத்தை நடத்தவில்லை என்று ராஜாஜி மறுநாள் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

காமராஜ்மீது கெட்ட எண்ணம் ஏற்படுத்தவே இத் துணையும் செய்து ராஜாஜி தமது ராஜதந்திரத்தை உபயோகித்தார். காமராஜ் சாமர்த்தியமாகவும் பொறுமையுடனும் நடந்து ராஜாஜியின் ராஜதந் திர்ததை முறியடித்தார் .அந்த நேரத்தில் இருந்த தகராறு எல்லாம் குலக் கல்வித் திட்டம் பற்றிய தகராறுதான். ராஜாஜியின் தலைமை பற்றிய தகராறு அல்ல. ஆகவே நண்பர்கள் பலர் வற்புறுத்தியும் ராஜாஜிக்கு காமராஜ் மறுப்பு அறிக்கை எதுவும் வெளியிடவில்லை.

இந்தக் கட்டத்தில் கொஞ்சம் கூடப்பதட்டம் காட்டாததால் காமராஜின் ராஜதந்திரம் எளிதாக வெற்றி யடைந்தது.

ஆந்திரா பிரிந்து போனபின் ராஜாஜி மந்திரி சபையில் 9மந்திரிகள் இருந்தார்கள் .புது மந்திரிகளை நியமனம் செய்வது குறித்து ராஜாஜி காமராஜிடம் ஆலோசனை கேட்டார். புது மந்திரிகள் நியமனத்துக்குக் காமராஜ் எதிர்ப்பு தெரிவித்தார். ஆந்திராவும் பிரிந்து போய்விட்டது. மந்திரிகளும் 9 பேர் இருக்கிறார்கள் இதற்குமேல் மந்திரிகளுக்கு என்ன அவசியம் என்று காமராஜ் கேட்டார் .காமராஜ் சொன்ன காரணத்தை ராஜாஜி ஏற்றுக்கொள்ளவில்லை. மேலிடத்துக்கு ராஜாஜி எழுதினார். மேலிடத்துக்கு தமது கருத்தையும்கமராஜும் எழுதினார். அர சாங்கத்தை நடத்தும் பொறுப்பில் தாம் இருப்பதால் புது மந்திரிகளை நியமிப்பது குறித்த அவசியம்.

தமக்குத்தான் தெரியும் என்று ராஜாஜி கூறியதால் நெருக்கடியை அதிகப்படுத்த மேலிடம் விரும்பவில்லை. மூன்று புது மந்திரிகளை ராஜாஜி நியமித்து மந்திரிகளின் எண்ணிக்கையை 12 ஆக உயர்ந்தினார்.

(தொடரும்)

## சிறுவர்களைப் படைகளில் இணைத்தல் புரோன்லைன் சுட்டிக்காட்டும் முரண்பாடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பான யூனிசெப்பிற்கும் இடையில் சிறுவர்களைப் படையில் சேர்ப்பது தொர்பாக வாதப்பிரதி வாதங்கள் தொடர்வதாக புரோன்லைன் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஆயிரத்து 387சிறுவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருப்பதாக யுனிசெப் அமைப்பு அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தது.

இந்த அறிக்கையை பெற்றுக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த அறிக்கையில் பெயரிடப்பட்டிருந்தபலர் 15வயதை அதாவது சிறுவர் பராயத்தை தாண்டியவர்கள் என்ற வாதத்தை முன்வைத்தது.

தமது அமைப்பு 1970ஆண்டு காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட போது ஐக்கிய நாடுகள் சபையினால் சிறுவர்களைபடைகளில்சேர்ப்பதுதொடர்பான கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 1989ஆம் ஆண்டிலியே சிறுவர்களை படைகளில் சேர்ப்பது சம்பந்தமான பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலைப்பாடு 2002ஆம் ஆண்டிலேயே நடைமுறைக்கு வந்தது என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் வாதமாகும்.

எனினும் யூனிசெப் அமைப்பு தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது படைகளில் சிறுவர்கள் சேர்த்துக்கொள்வதாக குற்றம் சுமத்தி வருவதாக புரோன்லைன் சஞ்சிகை சுட்டிகாட்டியுள்ளது. (து-9)

## விடுதலைப் புலிகளுக்கு உதவினார்களா? சந்தேகத்தின் பேரில் 46 சிங்களவர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு உதவி புரிந்ததாக சந்தேகிக்கப்பட்ட 46 சிங்களவர்கள் இது வரை கைது செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் புலிகள் இயக்கத்தினரிடம் பெருந்தொகையான பணத்தை பெற்றுக்கொண்டு புலி உறுப்பினர்கள் மற்றும் தற்கொலை குண்டு தாரிகளுக்கு இருப்பிட வசதி , வாகன வசதி மற்றும் பிறப்பு சான்றுபத்திரம் , அடையாள அட்டைகள் முதலியவற்றைப் பெற்றக்கொடுப்பதுடன் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து வருவதாகவும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

இவர்களுக்குத் தேவை பணம் மாத்திரமே வாடகையாக 2ஆயிரம் ரூபா கொடுப்பதற்கே அருகதையற்ற சிறிய அறை ஒன்றை 10.000 ரூபா வுக்கு கொடுக்கிறார்கள். சில வாரங் களுக்கு முன்பாக ஒரு தமிழ் ஜோடி 10.000 ரூபாவுக்கு சிறிய அறை யொன்றை வாடகைக்கு அமர்த்தி தமது பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இது போன்று வெவ்வேறு இடங்களில் இருந்து வந்து தங்கியிருப்போர் பற்றிய விபரங்களை இரகசிய பொலிஸாருக்கு அறியத் தருமாறும் அவ்வதிகாரி பொதுமக்களிடம் கேட்டு கொண்டுள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல் கள் மூலம் தெரிய வருகின்றது. (து-7)











கடந்த வெள்ளிக்கிழமை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் நவோதயா இறுதி நாள் நிகழ்வில் நவோதய கீதம் இசைக்கப்படுவதையும், கலந்துகொண்ட பிரமுகர்களையும், இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கண்காட்சியை பார்வையிடுவதையும், மற்றும் பெற்றோர்கள், மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- திலீவின்பன்)

ஆராய்வதும் சிந்திப்பதும் மனிதனின் உரிமை மட்டுமல்ல உயர்ந்த கடமையுமாகும்.

-இங்கர்சால்

வலம்புரி

# 65 வயதுவரை சேவை நீடிப்பு முகாமைத்துவத்தைப் பாதிக்கும்

அரச உத்தியோகஸ்தர்களின் சேவையை 65 வயது வரை நீடிப்பதென ஜனாதிபதி செயலகம் முடிபெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

55 வயதில் அரசபணியாளர்கள் ஒய்வு பெறவேண்டுமென்ற நியதி 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்குவதன் ஊடாக முறியடிக்கப்பட்டது.

இதன் காரணமாக 55 வயதில் ஒய்வு பெற்றுச் செல்லவேண்டியவர்கள் 60 வயது வரை அலுவலகங்களை ஆக்கிரமித்துக்கொண்டனர்.

அனுபவம் என்ற வகுதிக்குள் உள்ளடக்கப்பட்ட இச்சேவை நீடிப்பால் இளைய நிர்வாகிகள் தமது முகாமைத்துவத்திறனைவெளிகாட்ட முடியாமல் போயிற்று.

அதேநேரம் 60 வயது வரை சேவை நீடிப்புப் பெற்றவர்கள் தமது முதுமை ,இயலாமை, தொடர்ச்சியான சேவையால் ஏற்பட்ட தெவிட்டல், நவீன தகவல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தம்மைத்தயார் செய்ய முடியாமை போன்றவற்றால் தமது பணிநிலையில் சோர்வடைந்துள்ளனர்.

இதனால் அவர்கள் தமது முழுத்திறனையும் வழங்க முடியாமல் உள்ளது. இதற்கு வடக்கு கிழக்கு மாகாண சபை நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

அங்கு சேவை நீடிப்பில் உள்ள அதிகாரிகளின் அசமந்தத்தால் நிர்வாகப்பணிகள் தடங்கலாகிப் போகின்றன.

அத்துடன் ஒய்வு பெற்றவர்களுக்கு மீளவும் சேவை நீடிப்பு வழங்கியமையால் இடை நிலையில் இருக்கக்கூடிய பணியாளர்கள் பதவி உயர்வு கிடைக்காமல் மனச்சோர்வடைந்துள்ளதுடன் தமது செயற்திறனை முழுமையாக வழங்குவதிலும் பின்னடிக்கின்றனர்.

இவ்விதம் 'வயோதிப முகாமைத்துவம்'' சிவப்பு நாடா என்றழைக்கப்படும் காலதாமதத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

இந் நிலையில் சேவை நீடிப்பை 65 வயது வரை உயர்த்தி விட்டால் நிலைமை எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்துதான் பார்க்கவேண்டும்.

ஒய்வு பெறுவதன் ஊடாக அனுபசாலிகளை இழந்து விடுவதாகக் கருதினால் ஒவ்வொரு திணைக்களங்களும் ஒய்வு பெறும் அனுபவசாலிகளைக் கொண்ட ஆலோசனைகளை அமைத்துக்கொள்ளலாம்.

அல்லது ஒய்வு காலத்தின் போது இளைப்பாற்றுச் சம்பளத்தில் ஓர் தொய்வு ஏற்படுவதாகவும் அதனால் ஒய்வு பெறுபவர்கள் சடுதியான மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் எனவும் கருதினால் அவர்களுக்கு 65 வயது வரை அவர்கள் இறுதியாக எடுத்த சம்பளக் கொடுப்பனவை வழங்கி 65 வயதுக்குப் பின்னர் ஒய்வூதியத்தை வழங்க முடியும்.

இதைவிடுத்து 65 வயது வரை சேவை நீடிப்பு வழங்கினால் நாரிபிடித்து விடவும் பயிலுநர்களை நியமிக்கவேண்டி வரும் என்பது உறுதி.

# கட்டுப்பாடுகளால் மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை

(கோண்டாவில்)

மீனவர்களின் தொழில் நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனாலும் யாழ். குடா கடல் கரையோரப்பிரதேசத்தில் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினாலும் மீனவர்கள் தாம் விரும்பிய நேரங்களில் விரும்பிய முறைகளில் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இராணுவத்தினரால் வழங்கப்படும் கடற்றொழிலுக்கான பாஸ் நடைமுறை காரணமாக விரும்பிய நேரத்தில் தொழிலுக்கு செல்ல முடியாத நிலையும் திடீரென கடலில் ஒருவர் சுகயீன முற்றால் உடனடியாக கரைக்குத்திரும்ப முடியாத நிலையும் இருந்து வருகிறது.

மேலும் இரண்டு மூன்று நாட்களுக்கு கடலில் தங்கி நின்று தொழில் செய்யவும் பிறகு வலைகளை கட்டி வலிச்சல், தூண்டில், பறிக்கூடு போன்றவிரும்பிய முறைகளில் மீன்பிடியில் ஈடுபடவும் முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதால் நாள் ஒன்றுக்கான உற்பத்திச் செலவு அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மீனவர்கள் தமது உபகரணங்களை கடற்கரையோரமாக பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்ற இடங்கள் இன்மையால் அவற்றைதம்முடன் ஒவ்வொரு நாளும் எடுத்துச் செல்லவேண்டியுள்ளதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதேச மீனவர்கள், குறிப்பாக குருநகர் பகுதி மீனவர்கள் மீன் பிடித்துறைமுகங்கள் புனரமைக்கப்படாமையால் தொழில் செய்வதற்கு சிரமப்படுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பிடிக்கப் படும் மீன்களை உரிய முறையில் பதனிடவோ உள்ளூர் வெளி யூர் சந்தை வாய்ப்புக்களைப்பெற்றக்கொள்ளவே முடியாத நிலையும் உள்ளது. இக்காரணங்களினால் அதிகரித்துச்செல்லும் வாழ்க் கைச் செலவை ஈடுசெய்யவோ தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே மீனவர்களினால் முடியவில்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (து-36)

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையீடு புரன்ட்லைன் சஞ்சிகை வெளியிடும் தகவல்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு செயலாளர் சியாம் சரண் இலங்கைக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்ட சம்பவம் இந்தியா அதன் கடமையில் இருந்து விலகி நிற்க முடியாது என்பதை காட்டுவதாக புரன்ட்லைன் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

சூழ் யுத்த மேகங்களால் சூழப்பட்ட இலங்கையின் தற்போதைய சூழ்நிலையை தவிர்ப்பதற்காக பிராந்திய சர்வதேச நாடுகள் முனைநதுள்ளன.

இந்த நிலையில் இந்தியாவுக்கு உள்நாட்டிலும் இலங்கைக்கும் வெளியிலும் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக அந்த நாடு இலங்கையின் தீர்வு விடயத்தில் தமது பங்கை ஆற்ற முன்வநதுள்ளது.

எனினும் அது குறிப்பிட்ட வரையறையின் அடிப் படையிலேயே அமையும் என்ற செய்தியை வழங்குவதற் காகவே சியாம் சரன் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு இல்லாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வை எட்ட முடியாது என்ற நிலைப்பாட்டையும் இந்தியா வலியுறுத் தியுள்ளது.

இதனடிப்படையிலேயே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ யூலை 7ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடியதாகவும் புரன்ட்லைன் சஞ்சிகை தெரிவித்துள்ளது. (து-9)

# புலம்பெயர்ந்த மக்களின் வங்கிக் கணக்குகளை முடக்கும் செயலுக்கு கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அரச வங்கிகளில் புலம் பெய்ந்த தமிழர்களது வங்கிக் கணக்குகள் மற்றும் அவர்களது வங்கி வைப்பு சொத்துக்களை முடக்கும் அரசின் நடவடிக்கை ஓரவஞ்சகச் செயல் என் யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

வடக்கு -கிழக்கு மக்கள் போர்ச்சூழ்நிலை காரணமாக தமது உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வருகின்ற நிலையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அரச வங்கிகளில் செயற்படாமலிருக்கும் இம்மக்களின் பல கோடி ரூபா சொத்துக்களை அரசாங்கம் சுவீகரிக்கும் முயற்சியானது மனிதாபிமான முள்ள எந்தவொரு அமைப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் 10 இலட்சம் மக்களது கோடிக் கணக்கான நிதியை அரச உடமையாக்கி யுத்தத்திற்கு பயன்படுத்த போவதாக நிறுவனங்கள் அறிந்துள்ளமை அதிர்ச்சி தரக்கூடிய தகவலாகும்.

அரசாங்கத்தின் இச் செயற்பாடுகள் தொடருமேயானால் அரச வங்கிகளின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகும். இதனால் அரச வங்கிகளின் எதிர்காலச் செயற்பாடுகள் மக்களிடையே அவ நம்பிக்கையையே தேடித்தரும்.

எனவே அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை கைவிட்டு புலம் பெயர்ந்த மக்களின் வங்கிக் கணக்குகளை பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என அரச சார்பற்ற நிறுவனங்கள் மேலும் கேட்டுக்கொண் டுள்ளன. (து-7)

# பிரஞ்சு நாடாளுமன்றத்தில் கண்டனக்குரல்

(கொழும்பு)

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள உண்ணாவிரதக் கவனயீர்ப்புப் போராட்டத்தின் எதிரொலியாக அரசாங்கத்திற்கு எதிரான கண்டனக் குரல்கள் பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் ஒலிக்க ஆரம்பித்துள்ள தாக தெரிகிறது.

நேற்று முன்தினம் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரெஞ்சு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தமிழ் மக்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறைகளுக்கு உடனடியாக முடிவுக்கட்டப்பட்டு அமைதி வழியில் தீர்வை ஏற்படுத்துவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் காத்திரமான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பரிஸ் ஈபில் கோபுர முன்றலில் பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களால் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் குறித்து பிரெஞ்சு நடாளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இன்று முற்பத்து மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரத கவனயீர்ப்புப்போராட்டத்தில் தற்போது ஐரோப்பாவில் நிலவும் கடும் வெப்பத்திற்கு மத்தியிலும் மிகுந்த உணர்வெழுச்சியுடன் பெருவாரியான தமிழ் மக்கள் இணைந்து கொண்டனர்.

இன்றைய உண்ணாவிரதப் போராட்டத்தில் பிரான்ஸ் தமிழீழ மக்களுடன் அமெரிக்கா, பிரித்தானியா, சுவீஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழ் உறவுகளும் இணைந்து கொண்டனர்.

பிரான்ஸ் தமிழீழ மக்களின் உண்ணாவிரதப்போராட்டம் பிரஞ்சு நாடாளுமன்றத்தின் கவனத்தை ஈர்த்துள்ள அதே வேளை, தற்போது பிரான்ஸில் இயங்கி வரும் பல வெளிநாட்டு ஊடகங்களின் பார்வை உண்ணா விரதப் போராட்டத்தின் பக்கம் திருப்ப ஆரம்பித்துள்ளது. (து)

# தற்கொலை குண்டுதாரிகளுக்கு விசேட பயிற்சி பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தற்கொலை குண்டுத்தாரிகள் ஐம்பது பேருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைதுள்ளதாகத் தெரிகிறது.

பிரபலமானவர் மீது இலக்குத் தவறாமல் தாக்குவது எப்படி? குறித்த இடமொன்றை இலக்கு வைத்து நெருங்கிச் சென்று தாக்குதல் நடத்துவது எவ்வாறு?

என்பன பற்றி புலிகளின் வெடிபொருட்கள் ஆய்வின் விசேட நிபுணர்களாலேயே இப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிய வருகின்றது. (து-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



எழுந்து நில். வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன். தோள்மீதே சுமந்து கொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்து கொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

## வரணி இயற்றாலையில் இளைஞன் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வாகனத்தில் வந்த சீருடையினரால் இளைஞன் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் வரணி தாவளை இயற்றாலையில் இடம் பெற்றுள்ளது.

இராணுவச் சீருடை அணிந்து வந்த சிலர் பிரஸ்தாப இளைஞனின் கைகளையும் , கண்களையும் கட்டி வானில் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை சிவகரன் என்பவரே கடத்தப்பட்டவராவார். இச் சம்பவம் குறித்து பிரஸ்தாப இளைஞனின் மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டுள்ளார்.(து-15,133)

## இரு தமிழ் இளைஞர்கள் கல்முனையில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கல்முனையில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கல்முனை -மட்டக்களப்பு பிரதான வீதியில் பெரிய நிலாவணையில் நேற்று பிற்பகல் 2.05 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் இத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர்.

கன்னங்குடாவைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை ஆறுமுகம மற்றும் களுதாவளையைச்சேர்ந்த சிதமபரப்பிள்ளை கஜீவன் ஆகியோர் கொல்லப்பட்டோர் என தெரியவந்துள்ளது. (ச-5)

## திருகோணமலையில் இருவர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் முஸ்லிம் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார். காசிம் பாவா அப்துல் ரகீம் என்ற முஸ்லிமே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தோப்பூரில் உள்ள அவரது வீட்டின் முன்னால் நேற்றுக் காலை அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.இதனையடுத்து அப் பகுதியில் பதற்றம் நிலவுகின்றது.

இதேவேளை திருகோணமலை கிண்ணியா கச்சக்கொடித் தீவில் இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மதிய உணவு எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சடலம் கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## அம்பாறை கண்காணிப்புக்குழு பிரதிநிதிக்கு விடுதலைப்புலிகள் பரிசில் வழங்கிப் பாராட்டு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதியாக கடமையாற்றிய கிறிஸ்ரினா என்பவர் இடமாற்றம் செய்யப்படுவதையிட்டு அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சிநேகபூர்வமான கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கஞ்சிகுடியாறு சோலையகத்தில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா , உடும்பன் கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் வீரமணி ,மருத்துவப் பொறுப்பாளர் இதயன், வனவளப்பொறுப்பாளர் விநோதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் சமகால அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும் இராணுவம் யுத்தநிறுத்தத்தினை பல தடைவைகளாக மீறிவருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் 8 மாத காலமாக நேர்மையுடனும் நடுநிலைமையாகவும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்ட கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிக்கு மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் ராம் அவர்களால் தெரிவிக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியினையும் நினைவுப்பிரிசினையும் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஜெயா கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிக்கு வழங்கினார். (ச-5)

## ரணில் நாடு திரும்பியதும் ஐ.தே.கட்சி மறுசீரமைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று இலங்கை திரும்புகின்றார்.அவர் நாடு திரும்பிய பின்னர் அந்த கட்சியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளது என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன

அக் கட்சியின் செயலாளர். பிரதித் தவிசாளர்கள் மூவர் உட்பட முக்கிய பதவிகளுக்கான நியமனங்கள் அறிவிக்கப்படவுள்ளன என்று கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கமைய மேற்கொள்ளப்படவுள்ள நியமனங்கள் கட்சியின் அடுத்த பொதுக்கூட்டத்தின்போது அறிவிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## தொழிற்சங்க நடவடிக்கைகளால் துறைமுக அதிகாரசபைக்கு பெருநட்டம்

(கொழும்பு)

துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் கடந்த 9 நாட்களாக நடத்திய தொழிற் சங்கப்போராட்டம் நேற்று முன்தினம் முடிபடைந்துள்ளது.

இந்த போராட்டத்தினால் சுமார் 300 மில்லியன் ரூபா வருமானத்தினை துறைமுக அதிகார சபை இழந்துள்ளது.

ஏற்றுமதி இறக்குமதி துறைக்கு ஏற்பட்ட நட்டம், கப்பல் நிறுவனங்களுக்கு செலுத்திய தாமதக்கட்டணம் உட்பட ஏற்பட்ட மொத்த நட்டமானது சுமார் ஆயிரம் மில்லியன் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுக அதிகார சபை தொழிற்சங்க உறுப்பினருக்கும் துறைமுக விவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையினையடுத்து தொழிற்சங்க நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. (ச-5)

## ஈழத்தமிழர்களுக்கான உதவித்தொகையை 400 கோடி ரூபாவாக உயர்த்தியது தமிழக அரசு

(சென்னை)

தமிழ் நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளுக்கான உதவித்தொகையை 200 கோடி ரூபாவில் இருந்து 400 கோடி ரூபாவாக கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழ் நாடு அரசு உயர்த்தியுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் முதலாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை கட்டாய தமிழ்க்கல்வி. தமிழில் பெயரிடப்படும் திரைப்படங்களுக்கு கேளிக்கைவரி விலக்களிக்கப்படும் என்றும் நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளின்...

வெளியேற நேரிடும்.

மூன்று நாடுகளின் உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டுமென்று விடுதலைப் புலிகள் தங்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தால் போர்நிறுத்தக் காண்காணிப்புக் குழுவின் பணிகளுக்கு தடை ஏற்படும் என்றும் நினைக்கிறேன். கண்காணிப்புக்குழுவின் நம்பகத்தன்மையும் குறையும் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது அவர்களது அமைப்பு முழுமைக்குமான தடை என்று உணர்ந்துள்ளனர்.

செப்ரெம்பர் 11க்குப் பின்னைய சர்வதேச நிலைமை மாறியுள்ளது.முன்னர் பனிப்போர் காலத்துக்குப் பின்னரும் நிலைமை மாறியது.அரசியல் ரீதியாக நீங்கள் இயங்காமல் உங்களுக்கான சூழ்நிலைகளை உருவாக்கிக்கொண்டால் உங்கள் மீதான நம்பகத்தன்மை பாதிக்கும்.விடுதலைப்புலிகளின் நிலைபாடும் மாறும் என்று நான் நினைக்கிறேன்.ஆனால் அவர்களது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று என்னிடம் தெரிவித்து விட்டனர் என்றார் அன்டரஸ் ஒஜெலென்ட்ஸ். (ச-5)

## வடக்கு-கிழக்கை...

ஆளுநர், தேர்தல ஆணையாளர் ஆகியோர் பெயர்கள் குறிப் பிடப்பட்டுள்ளன.

பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரசாங்க சட்டத்தரணி இவ் வழக்குக்குறித்து கருத்துக்களைத் தெரிவிக்க சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் முன்னிலையாக மாட்டார் என்று கூறினார்.

அரச சட்டத்தரணியின் தகவலை வழக்குக்கோவையில் சேர்த்துக்கொள்ளும்படி தலைமை நீதிபதி தெரிவித்தார். (ச-5)

## வீதித்தடை...

ஊடாக தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றன.

ஒரு வழிப்பாதையாக இருந்த கஸ்தூரியார் வீதியூடாக தற்போது இரு வழிப்போக்குவரத்து நடைபெறுகிறது. இதனால் போக்குவரத்தில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஸ்ரான்லி வீதிவழியாக இ.போ.ச.பஸ் வண்டி கள் மாற்று வழியாக ஆஸ்பத்திரி வீதியைப் பயன்படுத்துகின்றன.

இதேவேளை ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (து 133)

## இந்திய எண்ணெய்க் குதங்களை மீளப்பெற அரசாங்கம் உத்தரவு

இலங்கையில் செயற்பட்டு வரும் இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் இருந்து திருகோணமலை எண்ணெய்க் குதங்களைப் பறிக்க பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்திய பெற்றோலிய நிறுவனத்திடம் திருகோணமலை, சீனன்குடா எண்ணெய்க் குதங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இந்த எண்ணெய்க் குதங்களைப் பொறுப்பேற்குமாறு பெற்றோலிய கூட்டு ஸ்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகமவிற்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தின் போது கூட்டுஸ்தாபனத்தின் முன்னாள் தலைவரினால் எழுத்து மூலம் இந்த எண்ணெய்குதங்கள் இந்திய நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தன.

அண்மையில் அரசாங்கத்திற்கும் இந்திய பெற்றோலிய கூட்டுஸ்தாபனத்திற்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

எனினும் ஜே.வி.பி.ஆதரவிலான தொழிற் சங்கங்களும் இந்தியாவை வெளியேற்ற வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் பெற்றோலிய கூட்டு ஸ்தாபனத்தின் கூட்டு தொழிற்சங்கப்பிரதிநிதிகள் சிலர் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்திய நிறுவனத்திடம் இருந்து எண்ணெய்க்குதங்களைப் பறிக்குமாறு ரட்ணசிறி விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## மன்னராட்சி காலத்தைப் போல சிங்களவர்களுக்கு ஆயுதப்பயிற்சி

### எல்லாவெல மேதானந்த தேரர் கோரிக்கை

(கொழும்பு)

தென்னிலங்கை சிங்களவர்களுக்கு அரசாங்கம் ஆயுதப் பயிற்சி வழங்கவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் இந்த யோசனையை தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு ஆயுதப்பயிற்சியினை வழங்கிய பின்னர் எந்தவொரு நேரத்திலும் சுயமாக முன்வந்து பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு பாதுகாப்புப்படையினருக்கு அவர்களால் உதவ முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசர்கள் காலத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் என நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆயுதப்பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டைப் பிடிக்கவரும் போது அரசர்கள் ஆயுதப்பயிற்சி பெற்ற பொதுமக்களையும் ஒன்றிணைத்து போர் புரிவார்கள் என்றும் எல்லாவெல மேதானந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை தோற்கடிக்க வேண்டுமாயின் அரசாங்கமும் பழைய மன்னர்கள் சென்ற பாதையில் சென்று பொது மக்களைக் கொண்ட படையணி ஒன்றை கட்டியெழுப்பவேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார். (ச-5)

கரன்
சதனா
நடித்த
சங்கானை கா.நே. 10.30, 2.15, 5.00

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 23.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.